# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone : No. 300

•REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 38-ம் இலக்கம்


# போலாந்தில் ஞானக்கல்விக்கு முட்டுக்கட்டை

போலந்தின் பொதுவுடைமை அரசாங்கம் சிறுவரின் மதபோதனை வேலையைத் தானே மேற்கொண்டு நடத்தப்போவதாகத் தெரிவித்திருக்கிறது. ஆயினும், இவ்வொழுங்கைக் கவனியாது நடக்குமாறு மேற்றிராணிமார் தமது குருமாருக்குக் கட்டளை விடுத்துள்ளார்கள்.

ஞானோபதேச வகுப்புகள்பற்றிய புதுச்சட்டம், ஒரு வாரத்தில் ஒரு மணித்தியாலம் அல்லது இரண்டு மணித்தியாலந்தான் மதபோதனை வகுப்பு நடத்த வேண்டுமென்று விதிக்கிறது.

மதபோதக வகுப்பு நடத்தும் ஆசிரியர் அரசாங்கத்தின் அனுமதி பெறவேண்டும். தகுதியான குருமார் இல்லாவிடில் இல்லறத்தார் இவ்வகுப்புகளை நடாத்த முடியும்; சந்நியாசிகள் ஞானோபதேச வகுப்பு நடாத்த அவர்களுடைய சபை ஒழுங்குகளுக்கு முரணாயிருக்கலாம். ஆகையால், தடைசெய்யப் பட்டிருக்கிறார்கள்.

ஞானோபதேச வகுப்பு நிலையங்களில், அதாவது விசாரணைப் பங்கிலுள்ள மண்டபங்களில் மாத்திரம் இவ்வகுப்புகள் நடைபெறும். ஞானோபதேச வகுப்புகள் நடத்தும் குருமாருக்கு அரசாங்கம் வேதனமளிக்கும் எனவும், இவ்வகுப்புகட்குவரும் நபர்களின் நாமாவலி அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் சில செய்திகள் கூறுகின்றன.

போலந்தின் ஞானாதிகாரத் தலைவர் கருதினால் விசின்ஸ்கி ஆண்டகை, செக்கோவாவில் மேற்றிராணிமாரைச் சந்தித்துப் புதிய சட்டம்பற்றிக் கலந்தாலோசித்தார். திருச்சபை — அரசாங்கம் தொடர்புறுத்துக் கமிட்டியும் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது விடயம்பற்றிக் கருதினால் ஆண்டவர் அரசாங்கத்துக்குச் சவால் விடுத்து, "நாம் இதற்கு ஒத்துக்கொடுக்க முடியாது; கிறிஸ்துநாதர் வேதம் படிப்பிக்கும்படி மேற்றிராணிமாரையும், குருமாரையும் அனுப்பினாரேயன்றி, கல்வி இலாகாவின் பரிசோதகரை அனுப்பவில்லை" எனக் கூறினார்.

## அகதியான புரொட்டஸ்தாந்தரைக் கருதினால் சந்தித்தார்

மியூனிக் அதிமேற்றிராணியார் கருதினால் டொவ்னர் ஜேர்மனியின் எவஞ்ஜெலிக்கசபை அக்கிராசனர் வண. கேட் ஷாவ் அவர்களைத் தரிசிக்கச் சென்றார். பேர்ளின் எல்லை மூடப்பட்டமையால் துன்பப்படும் "சகோதர புரட்டெஸ்தாந்தருடன் தாமும் அனுதாபப்படுவதாகத்" தெரிவித்தார். கிழக்கு பேர்ளின் வாசரான திரு. ஷாவ் மேற்கு பேர்ளின் சென்று திரும்ப முடியவில்லை. இவர் அண்மையில்தான் அக்கிராசனரானார்.

இதுபற்றி முதல் கடிதமூலம் அனுதாபந் தெரிவித்த கருதினால் ஆண்டகை பல நாட்களின்பின் நேரடியாக அவ்வக்கிராசனரைச் சந்திக்கச் சென்றார். சகோதர புரட்டெஸ்தாந்தருக்காகச் செபிப்பதாக வாக்குறுதியளித்தார். "எமக்கு அடுத்தடுத்து வரும் துன்பங்களில் நாம் பிரமாணிக்கமாயிருப்பதையே கர்த்தர் ஆசிக்கிறார்; அநீத நாஸ்தீக இருளின் மத்தியில் தமது திருநாமத்தை நேசிப்பவரை ஒற்றுமைப்படுத்துகிறார்."

## கிழக்கு ஜேர்மனியில் புதிய பிரசாரம்

கிழக்கு ஜேர்மன் பொதுவுடமை ஆட்சியாளர் புதிய பிரசாரமொன்றை ஆரம்பித்துக் கிறிஸ்துவ விசுவாசத்தையும் சுதந்திரத்தையும்பற்றிப் பராமுகங் கொள்ளும் மேற்கு ஜேர்மனியைக் கிழக்கு ஜேர்மன் சத்தோலிக்கர் கண்டிப்பதாக ஓர் செய்தியைப் பரப்பியிருக்கிறது. ஹால் எனும் இடத்தில் நடந்ததாகக் கூறப்படும் இக்கண்டனக் கூட்டத்தில் 200 கத்தோலிக்கர் "சமாதானத்திற்கு விரோதமான மேற்கத்திய நடவடிக்கைகளை" எதிர்க்குமாறு மேற்கு ஜேர்மன் கத்தோலிக்கரை ஏவுவதாகவுங் கூறியது. பேர்ளின்எல்லை மூடப்பட்டதைப் பாராட்டியும் பேசினராம்.

## இந்தியாவில் கத்தோலிக்க மருத்துவ கல்லூரி

இக்கல்லூரியின் திட்டக்குழு சென்றஆவணிமாதம் 25-28-ம், திகதிகளில்பெங்களூரில்கூடிற்று. இந்திய கருதினால் மேன்மை தங்கிய கிருசியாஸ் ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கினார். கூடியவர்கள்: சென்னை, பெங்களூர், நாக்பூர் அதிமேற்றிராணிஆண்டகைகள்; டெல்லி உதவிமேற்றிராணியார்; வண. லெஸ்க்சுவாமிகள்; மூன்றுடாக்றர்கள்: ஹோல்ம்ஸ், வெலியத், புர்செல்; கல்லூரியின் கட்டிடஅமைப்புத் திட்டவிருக்கும் திரு. பெர்னாண்டோ, மற்றும்சிலர்.

தேவைப்படும் நிலப்பரப்பு. 166 ஏக்கர். ஒருசில ஏக்கர்கள் வாங்கப்பெற்றுள்ளன. எஞ்சியதை வாங்க வசதிகள் உள்ளன. கல்லூரிக்குத் தேவைப்படும் பணமுதலுக்கு றோமையும், "மிஸெறெயோர்" எனப்படும் ஜேர்மன் பிறர்சிநேக இயக்கமும் ஓரளவு உதவிஅளிக்க முன்வந்துள்ளன. "தன்கையே தனக்குதவி" என்ற முதுரைக்கொப்ப இந்தியாவின் எல்லா மேற்றிராசனங்களிலும் இக்கல்லூரிக்காக நிதி திரட்ட ஒருபெரும்முயற்சி எடுக்கப்படும். நிதிதிரட்டுவதற்காக நாக்பூர் அதிமேற்றிராணி ஆண்டகை அவர்களின் இல்லத்தில் ஒருசெயலகம் நிறுவப்பெறும். நிதிதிரட்டும் வழிவகைகளை அறிந்துவர அண்மையில் பெங்களூர், நாக்பூர் அதிமேற்றிராணி ஆண்டகைகள் வெளிநாடு சென்றுவந்தனர்.

இம்மருத்துவகல்லூரி பரிசுத்த தந்தையின் புகழைப் பாடும்வண்ணம் "பரிசுத்த அருளப்பர் மருத்துவ கல்லூரி" எனப் பெயரிடப் பெற்றுள்ளது.

இக் கத்தோலிக்க மருத்துவ கல்லூரிக்கு மைசூர் கல்வி அமைச்சர் தன் முழு ஒத்துழைப்பையும் அளிக்க முன்வந்துள்ளார்.

## ஆர்ஜென்ரீனா ஒரு கத்தோலிக்க நாடே

ஆர்ஜென்ரீனாத் தலைவர் திரு. அர்தூரோ பிரோன்டிசி, தம் வெளிநாட்டுக் கொள்கையை விபரிக்கையில் கூறினார்: "ஆர்ஜென்ரீனா ஒரு கத்தோலிக்க நாடே. அது இறைவனை மறுக்கும், மனிதனின் மாண்பை மறுக்கும் எத்தத்துவத்தையும் எதிர்த்தே நிற்கும்."

## பொதுச்சங்க மத்திய குழுவின் இரண்டாம் கூட்டம்

வரும் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்கு ஆயத்தம் செய்யும் மத்திய குழுவின் இரண்டாம் கூட்டம் வரும் கார்த்திகை மாதம் 7-ம் திகதி தொடங்கி ஒரு வாரத்திற்கு நீடிக்கும். கர்தினால் கிருசியாஸ்ஆண்டகைஅவர்கள் ஐப்பசி மாத இறுதிவாரத்தில் றோமைக்குப் பயணமாவார். கார்த்திகை மாதம் 4-ம் திகதி கொண்டாடப் பெறும் பரிசுத்த தந்தையின் 80-வது பிறந்த தின விழாவின் போது, இந்திய மேற்றிராணி ஆண்டகைகள், குருக்கள், விசுவாசிகளின் பேரால் பரிசுத்த தந்தைக்கு வாழ்த்துதல்களை அளிப்பார்.

## புல்டாவில் சோகம்

ஜெர்மன் நாட்டு மேற்றிராணிமார்களின் சங்கம் ஆண்டுதோறும் புல்டா நகரில் கூடுகின்றது. இவ்வாண்டிற்கான சங்கம் சென்ற திங்கள் 29—31 நாட்களில் கூடிற்று. ஆனால், முதன் முறையாகக் கிழக்கு ஜெர்மனி ஆண்டகைகள் சங்கத்திலே காணப்படவில்லை. செங்கரடியின் முள்வேலியும் துப்பாக்கி முனையும் ஆண்டகைகளை வெளிவராது தடுத்துவிட்டன. "திருச்சபையின் சுதந்திரத்தைப் பாதிக்கும் இப்பாதகச் செயலை வெகுவாய்க் கண்டிக்கின்றோம். முள்வேலிக்குப் புறம்பே உள்ள எங்கள் சகோதர ஆண்டகைகளுடனும், மற்ற எங்கள் சகோதர சகோதரிகளுடனும் நாங்கள் என்றும் மாறா ஒற்றுமையைக் கொண்டுள்ளோம் என உலகிற்கு அறிவிக்கின்றோம்" என்று சங்கம் பிரகடனம் செய்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள்தரும் செய்தி

தாண்டவன்வெளி

## "பாத்திமாகிரி" திருநாள்—1961

போர்த்துக்காலிலே பாத்திமாஎன்னும் சிற்றூரிலே, காட்டுப்புற மரிய் மந்தைமேய்த்துநின்ற லூசியா, யசிந்தா, பிரான்சிஸ் என்னும் பிள்ளைகட்குத் தரிசனம்கொடுத்து, உலகில் சமாதானமுண்டாகத் திருச்செபமாலையை ஓதுங்கள் என்று கேட்டுக்கொண்ட பரலோக அன்னையின் — தாண்டவன்வெளி "பாத்திமாகிரி" 6-வதுஆண்டு விழா இவ்வருடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகுபக்திப்பரிமளிப்புடன் கொண்டாடப்பட்டது.

கிழக்கிலங்கையில் கீர்த்திபெற்று விளங்கும் இப்பாத்திமாகிரியானது, தாண்டவன்வெளி பரிசுத்தவியாகுலமாதா தேவாலயத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாண்டு விழாவுக்குமுன் ஒருவார காலமாக, தினமும் மாலை 6-30 மணிக்குச் செபமாலை, பிராத்தனை திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் நடந்தேறின. அன்று முதல் நாள் சனிவாரம், பாத்திமாகிரியும், மைதானமும் மாதாவின் வர்ணங்களாகிய நீல, வெள்ளைக் கொடிகளாலும், மின்சார விளக்குகளாலும் வெகுஅழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மாலை 6-30மணிக்குத் தேவாலயமணிகள் ஆர்ப்பரித்ததும் ஒலிபெருக்கியும் தன் வேலையை ஆரம்பித்தது. அவ்வேளை பாத்திமா அன்னையின் திருச்சுரூபத்தை மின்சாரகுழல் தீபங்களால், இயற்கை மலர்களிடையே அழகுறச் சிங்காரிக்கப்பட்டிருந்த ஆசனத்தில் இருத்தி மோட்டார்வண்டியின் மேல்ஏற்றிச் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமானது. சுற்றுப்பிரகாரவேளையில் செபமாலை, பிராத்தனை, தேவதாய்க்குத் தோத்திரப்பாடல்கள் பாடி ஒப்புக்கொடுத்ததுமல்லாமல், ஒவ்வோர் சந்திகளிலும் முழந்தாட்படியிட்டு உலக சமாதானத்துக்காக விசேஷ செபங்கள் சொல்லப்பட்டது.

சுற்றுப்பிரகாரம் "பாத்திமாகிரி" மைதானத்தை வந்தடைந்ததும், இம் மேற்றிராசனகுருத்துவ வெள்ளிவிழா நாயகர், மிகவண. ஜெறோம் டீசா விக்கார் ஜெனறல் சுவாமிஅவர்கள் மேளவாத்தியங்களுடன் பாத்திமாகிரிக்கு கொண்டுவரப்பட்டார். தொடர்ந்து வெள்ளிவிழா நாயகராலேயே தெளிவானதோர் பிரசங்கம் சொல்லப்பட்டது. பின் அவருக்கு வண. கென்றி பொன்னையாசுவாமி, வண. ஜி. ஈ. எல். வம்பேக் கட்டளைச்சுவாமி, துணைபுரிய மகத்தான மாலையாராதனையும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் நடந்தேறியது. ஆசீர்வாதவேளையில் இப்பங்கானது தேவதாய்க்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆசீர்வாதத்தின் பின் திருச்சரூப ஆசீர்வாதம் அளிக்கப்பட்டது.

அடுத்தநாள் ஞாயிறு திருநாள் நிறைவு தினத்தன்று இருபூசைகளும் கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிஅவர்களால் நிறைவேற்றப்பட்டது. மாலை 4-30-க்கு ஞான உபதேசவகுப்பு, செபமாலை, பிராத்தனை, திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் முதலிய பத்திமுயற்சிகளுடன். இவ்வருட ஆண்டுவிழா நிறைவெய்தியது.

—நிருபர்.

## குருநகலையில் சிறுவர் பயிற்சிமுகாம்

**"இவ்வாறான ஒருபயிற்சி முகாம் ஒவ்வொருவருடமும் நடாத்தப்பட்டால் வெகுவிரைவில் இந்த விசாரணைப்பங்கை மாற்றியமைக்கலாம்" என்று குறிப்பிட்டனர் மேற்படி முகாமுக்கு விஜயம்செய்த பெற்றோர், ஆசிரியர்.**

குறிப்பிட்ட இம்மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க பிள்ளைகள் ஏறக்குறைய 20—30 மைல் விஸ்தீரணத்துக்குப் பரந்து சிதறிக்கிடக்கிறார்கள் இவர்களை அணுகுவது எப்படி? எப்படி அவர்களை வழிநடத்துவது என்ற முக்கியமான பிரச்சினைக்குத் தீர்வு காணும்வகையில் தோன்றியதே மேற்படி பயிற்சிமுகாம்.

மேற்படி திட்டம் உதயமானதும் நல்லாயன் கன்னியாஸ்திரிமாரின் மாகாண சிரேஷ்டதாயார் வேண்டிய ஆயத்தங்களைச்செய்து முகாமைநடாத்தும்படி தமது அதிகாரத்துக்குட்பட்ட பாடசாலைத்தலைமை ஆசிரியைகளான கன்னியாஸ்திரிகளுக்கு உத்தரவுவிடுத்தார். அத்துடன் சேவை ஆர்வமுள்ள இளம் சேவையாளரை அனுப்பும்படியும்கேட்டிருந்தார். இளம் சேவையாளர் பயிற்சிபெறுவதன் மூலம் அப்போஸ்தொலிக்க தொண்டில் விருப்பையும், நாட்டத்தையும் ஊட்டிவிடலாம் என்பதே தாயாரின் நோக்கமாகும்.

பயிற்சிமுகாமுக்குத் தெரிவுசெய்யப்பட்ட இடம எட்டியாந்தோட்டை விசாரணைப்பங்கைச் சேர்ந்த கத்தோலிக்க கிராமமான குருகலையாகும். இவ்விடம் மேற்படி முகாமுக்கு மிகவும் வாய்ப்பானதாயிருந்தது. முழுக்கிராமமுமேதிட்டத்தைவெற்றிகரமாக நடாத்திமுடிக்க உதவியளிக்கமுன்வந்தெனலாம். திருஇருதயப் பக்திக்கூட்டத்தினர் சமையற் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். மரியாயின் மைந்தர் சபையினர் மற்றும் அலுவல்களைச் செய்தனர்.

விசாரணைப் பங்கு முழுவதிலுள்ள கத்தோலிக்க பிள்ளைகள் ஒவ்வொருவரும் பயிற்சிமுகாமுக்கு வரும்படி அழைக்கப்பட்டனர், வற்புறுத்தப்பட்டனர். துரிதமாயும், இலகுவாயும் விடயங்களை நடத்துவதற்குப் பாஷைவாரியாக வகுப்புகள் பிரிக்கப்பட்டன. தமிழ்வகுப்புகள் மார்கழிமாதம் நடைபெறும் பயிற்சிமுகாமில்இடம்பெறும். இம்முறை சிங்களப்பிள்ளைகளுக்குமட்டுமே முகாம் நடாத்தப்பட்டது.

ஒருவாரமாக நடைபெற்ற பயிற்சிமுகாமில் 200 பிள்ளைகள் கலந்துகொண்டனர். நான்கு கன்னியர்களும் அங்கேயே தங்கியிருந்து எல்லாவற்றையும் கவனித்தனர். இரு குருமார் முகாமிலுள்ள ஆண்பிள்ளைகளை மேற்பார்வை செய்ததுடன், முகாமில் கலந்துகொண்டவர்களின் ஆன்மகாரியங்களையும் கவனித்தனர்.

வெறும் போதனையோடு அமையாமல் கத்தோலிக்க சீவியத்தில் கவர்ச்சியும், விருப்பும், பற்றும்பெற முகாம் உதவவேண்டுமென்பதே குறிக்கோளாயிருந்தது. எட்டியாந்தோட்டைக் கன்னியர்மடக் கன்னியர்கள் பயிற்சிமுகாமுக்குப் பூரண ஒத்துழைப்பு நல்கினர். ஞானோபதேசம் கற்பித்தல், கத்தோலிக்க கீர்த்தனைப்பயிற்சி, என்பன நேரசூசியில் இடம்பெற்றிருந்தன. விளையாட்டுப்போட்டியும், பரிசளிப்பும் ஒருவார நிகழ்ச்சிகளுள் ஓர் அம்சமாயிருந்தது. சிறுவர்களுக்குச் சம்பாஷணைப்பூசை, சிலுவைப்பாதை என்பனவற்றிலும் பயிற்சியளிக்கப்பட்டது.

தினமும் மாலையில் படக்காட்சி சிறுவரை நன்கு கவர்ந்துகொண்டது. கல்வி சம்பந்தமான படக்காட்சிகளும, சமய சம்பந்தமான படக்காட்சிகளும் சிறுவருக்கு உற்சாகத்தையும், ஆர்வத்தையும்ஊட்டியதுடன் கிராமமக்களின் கருத்தையும் கவர்ந்துகொண்டது. அநேக பிறசமய அன்பர்களுக்கு இந்த முகாம் கிறிஸ்தவத்துடன் நேரடியான தொடர்பை ஏற்படுத்தியிருக்கும். சற்பிரசாதச் சுற்றுப்பிரகாரத்துடன் முகாம் முடிவடைந்தது. ஒருவாரமே பயிற்சி முகாம் நடைபெற்றபோதும் அது போதியதாக அமையவில்லை என்பது உணரப்பட்டது. எனினும், சிறுவர் பயிற்சிமுகாமை நன்கு விரும்பி மகிழ்ச்சியோடு நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர்கள்.

"நாம் நமது கத்தோலிக்க பிள்ளைகளை நல்லமுறையாகப் பயிற்றவேண்டுமானல் இம்மாதிரியான பயிற்சியே அவசியம் வேண்டப்படுகிறது" என்று இப்பயிற்சிமுகாமுக்குப் பொறுப்பாயிருந்த சங். தாயார் குறிப்பிட்டார். மேலும் தனது திட்டம் எவ்வளவு நிதர்சனமானது என்பதற்கு முகாமின் பலன்கள் அத்தாட்சிகளாய் நிற்கின்றன என்றும் கூறினர்.

## வேலைசெய்யும் தாய்மார் தங்கள் பிரச்சினைகளை ஆராய்ந்தனர்

கொழும்பிலுள்ள கத்தோலிக்க வேலைசெய்யும் தாய்மார் சங்கத்தினல் கண்டியில், அச்சங்கத்தைச் சேர்ந்த 14 தாய்மாருக்காக ஒரு ஞானவொடுக்கம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 14 தாய்மாரும், இரு கன்னியாஸ்திரிமாரும் ஞானவொடுக்கத்தில் கலந்துகொண்டனர். ஞானவொடுக்கத்தில் கலந்துகொண்ட ஒவ்வொருவரும் போதகரிடம் தங்கள் பிரச்சினைகள்பற்றி நன்றாக மனம்விட்டுப் பேசிக்கொள்ள வசதியளிக்கும்பொருட்டு ஞானவொடுக்கம் செய்வோரின் தொகை மட்டுப்படுத்தப்பட்டது.

ஞானவொடுக்கத்தின்போது கண்டி மேற்றிராணியார் மகாவந். நாணயக்கார ஆண்டகையவர்கள் தாய்மையைப் பற்றியும், திருமணம் சம்பந்தப்பட்ட சில விடயங்கள்பற்றியும் இரு பிரசங்கங்கள்செய்தார். அதைத் தொடர்ந்து ஞானவொடுக்கம் செய்தோர் சந்தேக வினக்களைஎழுப்பித் தத்தம் சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டனர். அதைத் தொடர்ந்து வண. வீபஸ் சுவாமியவர்கள் வீட்டுக்கல்வியின் அவசியம், பாடசாலைக்கல்வியின் அவசியம், சீவியத்தின் அம்சங்கள், கலப்பு மணம், விவாகரத்து, தவறுகள்என்பனபற்றிப் பிரசங்கங்கள் நிகழ்த்தினர். சுவிசேஷ ஆராய்ச்சி—வியாக்கியானம், விளக்கம் என்ற விடயம் கடைசிநாள் நிகழ்ச்சியாய் இருந்தது. சம்பாஷணைப் பூசையுடனும், ஆசீர்வாதத்துடனும் ஞானவொடுக்கம் ஞாயிறு. காலை 11-45மணிக்கு முடிவெய்தியது. ஈற்றில், கண்டி நல்லாயன் மடத்துத் தாயாருக்கும், ஞானவொடுக்கம்செய்ய உதவிய சகலருக்கும் நன்றிகூறப்பட்டது.

## ஆபாச பிரசுரங்களைத் தடுக்கும்வழி

ஆபாச பிரசுரங்களைத் தடைசெய்ய அரசாங்கம் அநேக சட்டங்களை ஏற்படுத்துவதல்ல, கண்டிப்பான குறிப்பான, அமுல்நடத்தக் கூடியதான சட்டங்களை ஏற்படுத்துவதே விரும்பத்தக்கது. மேற்குஜேர்மனியில் ஒழுக்கத்தைப் பாதிக்கக் கூடிய பிரசுரங்களை அச்சேற்றுவதும், காட்சிக்கு வைப்பதும், விற்பனை அல்லது விநியோகஞ் செய்வதும் மறியலாலும், அபராதத்தாலும் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களாகும். அத்துடன் "இளைஞரின் ஒழுக்கத்தைக் கெடுக்கஏதுவான" நூல்களின் பட்டியல் ஒன்றும் அரசாங்கதகவற்பகுதி தயாரித்துவைக்கும். கொள்ளை, போர், இனவிரோதம் போன்றவைகளைப் பாராட்டும் நூல்களும் இதில் அடங்கும்.

இப்பட்டியலில் அடங்கிய நூல்கள் எவையேனும் விற்பனைசெய்யவோ, 18வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்குக் கொடுப்பதோ விலக்கப்பட்டிருக்கிறது மாத்திரமல்ல அவைபற்றி வியாபாரப் பத்திரிகைகளைத்தவிர்ந்த ஏனையபத்திரிகைகளை விளம்பரம்செய்யவோ, காட்சிக்குவைக்கவோ கூடாது. இச்சட்டம் கண்டிப்பானதும், அமுல்நடத்தக் கூடியதாயும் விளங்குகிறது. ஏனெனில், 18வயதுக்குக்குறைந்த ஒருவருக்கு இந்நூல்களில்ஒன்று விற்கப்பட்டதுஎன மாத்திரம் அத்தாட்சிப்படுத்துவது ஒருவரைக் குற்றவாளியாக்கப் போதுமானது.

### பிரசுர சுதந்திரம்:

"எல்லாம் அறிந்தவர்கள்" எனக் கூறிக்கொள்பவர்களுடைய சுதந்திரம் இச்சட்டத்தினல் பாதிக்கப்படவில்லை; ஏனெனில், இத்தகையவர்களுக்கு நூல்கள்பெற வசதியுண்டு. பிரசுரசுதந்திரம் மக்களின்சுதந்திரத்தின் காத்திரமான அம்சம்; பாதுகாக்கப்படவேண்டியது; காரணம்இன்றிக் கட்டுப்படுத்த வேண்டாதது. எனினும், அரசாங்கத்திற்குத் தணிக்கைசெய்யும் உரிமையும் உண்டு. மனிதஉரிமைகளைப் பாதுகாப்பதில் திறமையான சட்டங்கள் உருவாகியிருக்கின்றன. எனினும், பிரசுரசுதந்திரத்தை அபாவனைசெய்வதைத் தடுப்பதற்குச் சட்டங்கள் போதியன இல்லை. "பொதுமக்களின் ஆன்மார்த்த ஒழுக்கவாழ்வின் அடிப்படையைப் பத்திரிகைகள் அளிக்கவிடுவது சீர்கேட்டுக்குச் சட்டஉத்தரவு கொடுப்பதுபோல் ஆகும். இக்கொள்கையை ஒப்புக்கொள்வதற்குக் கிறிஸ்தவபண்பாடு அவசிம் அன்று," என்றார் 12-ம்பத்திநாதர்.

### சட்டம் போதியதன்று:

ஆபாச பிரசுரங்கள்பற்றி நாட்டில் சட்டம் ஏற்பட்டபோதிலும், அதில் தனித்தவர்களின் மனச்சாட்சிக்கு ஈடாகாது. ஆபாசபிரசுரங்களுக்கு விரோதமாக நாம்எடுக்கும் எந்தமுயற்சியும் சித்திபெறவேண்டுமாயின் குடும்பங்களின் ஒத்துழைப்பு அவசியம்.

ஒவ்வொருவரின் முயற்சியும், ஒத்துழைப்பும் தேவைப்படாமற் போகுமளவிற்கு அரசாங்கமோ, திருச்சபையோ பிரசைகளைக் கட்டிக்காவல்பண்ணுவது விரும்பத்தக்கது அல்ல. தனித்தவர்களின் நல்லெண்ணத்துக்கு எதுவும் இணையாகாது.

குறித்த சிலநூல்கள் அல்லது பிரசுரங்கள் தடைசெய்யப்படுவதைப் பிரசித்தப்படுத்துவதும் விரும்பத்தக்கதல்ல. ஏனெனில்அதுவேபிரசாரமாகமாறும்.

முன்கூறிய கருத்துகளடங்கிய நிருபமொன்றை, ஆபாசபிரசுரங்களைத் தடைசெய்யும் நோக்கத்துடன் அவுஸ்திரேலிய மேற்றிராணிமார் அண்மையில் விடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## பாடசாலைகளும் தேசியசேவையும்

ஆசிரியர்களும், பதினான்குவயதுக்குமேற்பட்ட மாணவர்களும் சமுதாயஅபிவிருத்தித் திட்டவேலைகளிலே கட்டாயமாகக் கலந்துகொள்ளச் செய்வதற்கான தேசியசேவைத் திட்டம்ஒன்றைக் கல்விப்பகுதி வகுத்திருக்கின்றது. மாதத்தில்வரும் நான்குசனிக்கிழமைகளும் இந்தசேவைக்காக ஒதுக்கப்படவேண்டுமென இத்திட்டம் கூறுகின்றது. அதாவது இப்போதுபோல ஐந்துநாட்களுக்குப்பதில் இனிமேல் ஆறுநாட்களுக்குப் பாடசாலைகள்நடைபெறும். ஐந்துநாட்கள் புத்தகப்படிப்பிலும், ஆறுவதுநாள் பாடசாலைகளினதும், கிராமங்களினதும் அபிவிருத்திவேலைகளிலும்ஆசிரியர்களும், மாணவர்களும் ஈடுபடுவார்கள்.

## 13விடுமுறைநாட்கள்

அடுத்துநிகழும் 1962-ம்ஆண்டிலே அரசாங்க—வங்கிவிடுமுறை நாட்கள் பதின்மூன்றாகும். அவையாவன: (1) தைப்பொங்கல, தைமாதம் 14-ந்திகதி, ஞாயிறு. (2) சுதந்திரஞாபகதினம் மாசி4, ஞாயிறு. (3) சிங்கள-தமிழ் புதுவருடப்பிறப்பு, சித்திரை14, சனி. (4) மேதினம், வைகாசி1, செவ்வாய். (5) வெசாக், வைகாசி18, வெள்ளி. (6) மகமது பிறந்தபெருநாள், ஆவணி14, செவ்வாய். (7) கிறிஸ்மஸ், மார்கழி25, செவ்வாய். (8) துருது பௌறணை தைமாதம்19, வெள்ளி. (9) றமஸான்முடிவையடுத்ததினம், பங்குனி8, வியாழன். (10) பெரிய வெள்ளிக்கிழமை; சித்திரை20, வெள்ளி. (11) வெசாக்; மேலும் ஒருதினமாக வைகாசி19, சனி. (12) பண்டாரநாயக்காநினைவுதினம் புரட்டாசி26, புதன். (13) தீபாவளி, ஐப்பசி 27, சனி. ஆவணி 30-ந்திகதி சனியும், மார்கழி 31-ந்திகதி திங்களும் விசேஷவங்கி விடுமுறைநாட்கள். போசன் பௌறணைத்தினம் ஆனி 17-ந்திகதி வருகின்றது. இது அரசாங்க—வங்கி விடுமுறைநாளாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆயினும்இது ஒருஞாயிற்றுக்கிழமை வருவதால்கைவிடப்பட்டுள்ளது.ஓர்அரசாங்க விடுமுறைநாள் ஞாயிற்றுக்கிழமையில் வருமானால் அதற்குப்பதிலாக மற்றோர் விடுமுறைநாள் அருளப்படமாட்டாது.

## விரிவுரையாளர் வெளியேறினர்

இலங்கைச் சர்வகலாசாலையிலே வரலாற்று விரிவுரையாளராய் இருந்துவந்தவரான டக்றர் எஸ். அரசரத்தினம்அவர்கள் தமதுபதவியை இராசினாமாச்செய்துவிட்டு மலாயாச் சர்வகலாசாலையிலே இந்தியகலைத்துறையில் ஒருபோசிரியராகப் பதவியேற்று அங்குபிரயாணமாகியிருக்கின்றார்.

## ஆசிரியர்களுக்கு வேலை

அரசாங்கபாடசாலைகளில் காலியாயிருக்கும்ஸ்தானங்களை நிரப்பவதற்காக விரைவிலே மூவாயிரம்ஆசிரியர்கள் கல்விப்பகுதியினால் நியமனஞ்செய்யப்படவிருக்கிறார்கள். இவர்களின் சம்பளச்செலவைச் சமாளிப்பதற்கென்று 57இலட்சத்து 96ஆயிரத்து 500ரூபா உபமான்யம்கோரிச் சனப்பிரதிநிதிகள்சபையிலே கல்விமந்திரி ஒருபிரேரணை கொண்டுவரவிருக்கின்றார். 27பிள்ளைகளைக்கொண்ட ஒரு வகுப்புக்கு ஓர்ஆசிரியர்என்ற விகிதப்பிரகாரம் காலியாகவுள்ளஸ்தானங்களுக்குப் புதியஆசிரியர்கள் நியமனஞ்செய்யப் படுவார்கள்.

## கார்களின் இறக்குமதி குறைந்தது

மோட்டர்கார்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தியதன்விளைவாக இவ்வருடத்திலே இதுவரை அந்நியச்செலவாணியில் சுமார் 2கோடியே 90 இலட்சம்ரூபா மிச்சம்ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இவ்வருடத்தின் முதல்ஆறுமாதங்களிலும் இலங்கையில் 1,100கார்களே இறக்குமதி செய்யப்பட்டன. சென்றவருடத்தின் முதல்ஆறுமாதங்களிலும் இறக்குமதி செய்யப்பட்டகார்கள் 5,300. அதாவது ஐந்தில்ஒருபங்காகக் குறைந்திருக்கிறது.

## விசாவரியின் காலஎல்லை

சென்றஆண்டிற்கான விசாவரியின் காலஎல்லை நிகழும்1961-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 14-ந்திகதியுடன் முடிவடைந்துவிட்டது. அதனால் நிகழும் புரட்டாசிமாதம் 15-ந்திகதியிலிருந்து அடுத்துநிகழும் 1962-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 14-ந்திகதிவரை புதியவிசாவரிகாலமாகக் கணக்கிடப்படும் ஆயினும் புரட்டாசி15-ந்திகதியிலிருந்து மூன்றுமாதங்களுக்குமேல் விசாவைத்திருப்பவர்கள் இந்தக்காலவரைக்கான விசாவரியைக் குடியேற்ற-வெளியேற்றபகுதி அறிவித்துள்ள திகதிக்குள் கட்டவேண்டும்.

## தோல் இறக்குமதிவரி

சப்பாத்துகள், செருப்புகள் ஆதியனசெய்வதற்கென்று பிறநாடுகளிலிருந்துஇறக்குமதிசெய்யப்படும்தோல்களின் இறக்குமதிவரியைப் 17½சதவிகிதத்திலிருந்து 100சதவிதமாக அரசாங்கம் உயர்த்திவிட்டமையாலும், தோல்இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதித்தமையாலும் உள்நாட்டிலே உற்பத்திசெய்யப்படுகின்ற சப்பாத்துகள் ஆதியவற்றின் விலை உயர்ந்துள்ளது. தோல்களுக்கு விதிக்கப்பட்டுள்ளஉயர்ந்தவரி குறைக்கப்படாவிடின் ஏறக்குறையஆறாயிரம் தொழிலாளர்கள் தங்கள் வேலையை இழக்கும் அபாயநிலையில் இருக்கின்றார்கள். தோல்களின் கூடியவரியேற்றம்காரணமாக இறக்குமதிசெய்யப்பட்டதோல்கள் கடந்தஒன்றரைமாதங்களாகத் துறைமுகத்திலே இருந்துவருகின்றன.

## அரசாங்கமும் மொழிப்பிரச்சினையும்

செனற்சபையிலே சென்றவெள்ளிக்கிழமை நடைபெற்ற வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்மீது செனற்றர் ஜி. நல்லையா அவர்கள் உரையாற்றுகையில்—"மொழிப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்கு வேண்டியநடவடிக்கைகளைத் தான்எடுத்துவருவதாக அரசாங்கம்கூறுகின்றது; ஆனால், அந்தநடவடிக்கைகள் என்னென்னஎன்பதை முதலில்அறிவிக்கவேண்டும்; இந்தநாட்டிலே சிங்களவர்களும், தமிழர்களும் பலநூற்றாண்டுகாலமாகச் சிநேகிதமாகவாழ்ந்தார்கள்; ஆனால், அரசியல்வாதிகளின் சூழ்ச்சியால் இன்று இந்த இரண்டுசமூகத்தினரும் பிளவுபட்டுள்ளனர்; ஆகவே,மொழிப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் தமிழ்ப்பேசும் மக்களின் ஒத்துழைப்பைப் பெறமுடியாது; மொழிப்பிரச்சினை விஷயத்தில் தமிழரசுக்கட்சியின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்காவிட்டாலும் இப்பிரச்சினையைத் தீர்க்க அரசாங்க திட்டம்ஒன்று இருக்கிறதுதானே; அந்தத்திட்டத்தைத்தானும் நடைமுறைக்குக்கொண்டுவர அது ஏன்தயங்குகிறது?" எனக் கூறலாயினர்.

## ஒருமந்திரியையும் காணவில்லையே!

சனப்பிரதிநிதிகள்சபை சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் உபசபாநாயகர் தலைமையில் கூடியபோது 'கோறம்' இல்லாமல் போய்விட்டது. அவர்வந்து ஆசனத்தில்அமர்ந்ததும் ஒருமந்திரியாவது அங்கு காணப்படவில்லை. "ஒருமந்திரியையும் காணவில்லையே" என்று அவர் வியப்புடன் கேட்டார். "இந்தஅரசாங்கத்தில் ஏதோபழுதுபோல இருக்கிறது; வேளைக்கு இது இராசினாமாச்செய்துவிடுவது நல்லது" என்றகுரல்—எதிர்க்கட்சிப் பக்கத்திலிருந்து திரு. தஹநாயக்காவின்குரல் கிளம்பியது. "கோறம்"மணி அடிக்கப்பட்டபோது, ஒருதற்காலிக மந்திரிமாத்திரம் சபைக்குள் நுழைந்தார். இதுவிஷயமாய்ப் பிரதமர்சிறிமா எட்டுமந்திரிகளுக்கும், உதவிமந்திரிகளுக்கும் சென்றசனிக்கிழமை விடுத்துள்ள கடிதம்ஒன்றிலே, சனப்பிரதிநிதிகள் சபைக்கூட்டம் நிகழும்போது—முக்கியமாக அவர்களுடன்சம்பந்தப்பட்ட விஷயங்கள் விவாதிக்கப்படும்போது சபையிலே அவர்கள் சமுகமாயிருக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்.

## செலவு அதிகரித்துள்ளது

சனப்பிரதிநிதிகள்சபைக் கூட்டங்கள் கடந்தசிலமாதங்களிலே அடிக்கடியும், இராக்காலத்திலும் நீண்டநேரம் வரை நடைபெற்றதால் செலவு அதிகரித்துள்ளது. சபையின் ஊழியர்களுக்கு மேலதிகநேரவேலைக்கு அலவன்ஸும், மின்சாரபாவனையும் கூடியிருப்பதைச் சமாளிக்குமாறு 48,000ரூபாவுக்கான உபமான்யம் ஒன்று சபையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

## தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள்

வித்தியாதிபதியின் முகாமையின் கீழுள்ள பாடசாலைகளில் கடமையாற்றுவதாலே அரசாங்கஊழியர்களாக வந்திருக்கும் தராதரப்பத்திரம்பெறாத ஆங்கில,சுவபாஷா ஆசிரியர்கள் தங்கள் பென்ஷன்நிதிக்குக் கொடுத்துவரும் நான்குசதவிகித சந்தாவைத் தவிர மேலும்இரண்டுசதவிகித சந்தாவை ஆசிரியரின் விதவைகள்-அனாதைகள் பென்ஷன்நிதிக்குக் கட்டவேண்டும். நிரந்தரசேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட தராதரப்பத்திரம் பெறாத சகலஆசிரியர்களுக்கும் புதியநியமனப்பத்திரம் வழங்கப்படவிருக்கிறது.

## உதவி வித்தியாதிபதி

கல்விப்பகுதியின் புதியதிட்டத்திற்கிணங்க ஓர்உதவிவித்தியாதிபதியாக இதுவரை வடபகுதிக் கல்விஅதிகாரியாகஇருந்துவந்த திரு. எஸ். யு. சோமசேகரம் நியமிக்கப்பட்டிருக்கின்றார். யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் கடமையாற்றும் இருகல்விஅதிகாரிகளும் இவரின்கீழ்இருந்துவருவார்கள்.

## தயாராயிருக்க வேண்டுகோள்

களனியைச்சேர்ந்த பொல்லாகலை எனுமிடத்திலே நடந்தேறியகூட்டம் ஒன்றில் முன்னைநாள்நிதிமந்திரி திரு, எம். டி. எச். ஜெயவர்த்தன பேசியபோது: எத்தருணத்திலும் பொதுத்தேர்தல்ஒன்றை எதிர்நோக்கப் பொதுமக்கள் தயாராயிருக்குமாறு கேட்டுக்கொண்டார். தற்போதுஎழுந்துள்ள நிலைமையையும், அரசாங்கத்தின் செயல்களையும் கவனிக்குமிடத்து எத்தருணத்திலும் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறவிருப்பதைத் தவிர்க்கமுடியாதென்றும் அவர்கூறலாயினர்.

## வெளிநாட்டுச் செய்திகள்

● சமீபத்திலே கல்கத்தாவில் பெய்தமழையின்போது வீழ்ந்ததூசிகளை ஆராய்ந்துபார்த்ததில் அதிலே கதிரியக்கச்சாம்பலும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால்,போாபத்தை விளைக்கக்கூடிய அத்துணை பெரும்அளவிலே இந்தச்சாம்பல் வீழ்ச்சி இன்னும்அதிகரிக்கவில்லையாம்.

● பர்மாவிலே புத்தசமயத்தை அரசாங்கமதமாகப் பிரகடனஞ்செய்யும் மசோதாஒன்று பர்மியபாராளுமன்றத்தில் நிறைவேறியதிலிருந்து அதன்மூலம் சிறுபான்மை மதத்தினரிடையே ஏற்பட்டுள்ளகவலையைப் போக்குமுகமாகச் சிறுபான்மை மத உரிமைகள்பாதுகாப்புத் திருத்தமசோதாஒன்றும் சென்ற20-திகதி யன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

● இசையினால் கரும்புப்பயிர்கள் சராசரியாக ஒருஅடிவீதம் கூடிய உயரத்துக்கு வளர்கின்றனவென்று புதுவை விவசாயத்தலைவர் திரு. சந்தான கிருஷ்ணநாயுடு தெரிவித்திருக்கிறாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

● "யுத்தம் இனிமேல் நிகழக்கூடியதல்லவென்று நான்நம்புகிறேன்; அல்லவென்றுநிகழ்ந்தால் அது அணுஆயுதயுத்தமாகவே இருக்கும்; அப்போது மனிதவர்க்கம் முழுவதினதும் பரிநாசமே அதன்விளைவாகும்" என்று சோவியற் விஞ்ஞானகழகத்தின் உபதலைவரான திரு. ஏ. வி. ரொப்சிலெவ் கூறுகின்றார்.

● கலம்பஸ்அல்ல, சீனர்களே அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்களென்று "வென் வெய் பாலோ" என்றசீனக்கம்யூனிஸ்த பத்திரிகை சென்ற சனிக்கிழமை ஒருசெய்தி வெளியிட்டிருக்கிறது. கலம்பஸுக்கு ஆயிரம்வருடங்களுக்குமுன் சீனப்புத்தர்கள் 1492-ம்ஆண்டு அத்திலாந்திக் சமுத்திரத்தைக்கடந்து 'புதியஉலகம்' போய்ச் சேர்ந்தார்களென்று அப்பத்திரிகை பெருமையடிக்கின்றது.

● அணுஆயுதப் பரீட்சைகளைச் சோவியற்ருஷியா திரும்பவும் நடத்தத் தொடங்கியதிலிருந்து ஐப்பான் முழுவதுமே மழையின்போது கதிரியக்கமும், ஆகாயத்தூசியும் முந்தியவாரத்தில்தீவிரமாக அதிகரித்துவந்து சென்ற வெள்ளிக்கிழமை அதிகம் உயர்ந்தமட்டத்தை அடைந்திருப்பதாக ரோக்கியோ நகரிலிருந்து செய்திகிடைத்துள்ளது.

● மத்தியஆசியாவிலும், சைபீரியாவிலும் அணுஆயுதப்பரிசோதனைகள் நடத்திவருகின்ற சோவியற்ருஷியாவின்செயலை எழுத்துமூலமாகவும், வாய்ப்பேச்சுமூலமாகவும் ஜப்பானிய அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துவருகின்றது. இதற்குக்காரணம், அப்பரிசோதனைத்தளங்கள் ஜப்பானைஅடுத்திருப்பதும், அவற்றால் ஜப்பானியரே வெகுவாகப் பாதிக்கப்படுவரென்ற பயப்பாடுமேயாகும்.

## காப்பிச்செய்கை

தற்போது இலங்கையிலே காப்பி இறக்குமதிசெய்வது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் காப்பிச்செய்கைக்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கமாக அரசாங்க காப்பிப்பண்ணைகளை அமைக்கவும், குடியேற்றதிட்டங்களிலே காப்பிச்செய்கையை ஊக்கப்படுத்தவும் விவசாய-காணி மந்திரிகாரியாலயம் தீர்மானித்துள்ளது. அரசாங்க தோட்டப்பயிர்க் கூட்டுறவுஸ்தாபனம் கண்டி மாவட்டத்திலே ஆயிரம்ஏக்கர்கொண்ட காப்பித்தோட்டம்ஒன்றைத்தொடக்க ஒழுங்குசெய்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஐப்பசி மாதம் 1961

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஞா. | 2 | **பெந்தெக்கோஸ்தின்பின் 19-ம் ஞாயிறு** (வி. ம.) | ப. |
| 2 | தி. | | காவற் சம்மனசுகளின் திருநாள் | வெ. |
| 3 | செ. | 1 | **வேதபோதக நாடுகளின் பாதுகாவலரான அர்ச். சின்னத் தெரேசம்மாள்** (வி. ம.) | வெ. |
| 4 | பு. | | அர்ச். பிரான்சீஸ்கு அசிசியார் | வெ. |
| 5 | வி. | ம. | காலதினம் (ஞாயிறு பூசை) அர்ச். பிளாசித்தப்பர் தோழர் ஞா.) | ப |
| 6 | வெ. | யே. | அர்ச். புருனோ | வெ. |
| 7 | ச. | 2 | **திருச்செபமாலைத்திருநாள்** (அர்ச். மாற்கு ஞா. (வி ம.) | வெ. |

சத்திய வேத

# பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
புரட்டாசிமாதம் 30-ந் திகதி

## உலக சமாதானம்

பேர்ளின்பிரச்சினை சம்பந்தமாய் மற்றோர்உலகயுத்தம் மூண்டுகொள்ளுமோவென்று அகில உலகமும் அச்சமுற்று, நிம்மதியற்றுக கலங்கிக் கொண்டிருக்கின்ற ஓர் அபாயகரமான சந்தர்ப்பத்திலே உலகில்சமாதானத்தை நிலைநாட்டுதற்கென்று நிறுவப்பட்டுள்ள ஐக்கியநாடுகளின் சபைப் பொதுக்காரியதரிசியாயிருந்து சமாதானத்திற்காக அல்லும்பகலும் அயராதுழைத்து வந்த திரு. டாக் ஹமர்ஷீல்ட் அவர்கள் துரதிர்ஷ்டவசமாக ஒருவிமானத்துக்குப் பலியானாரெனப்பரந்த மகா துயரசெய்தியானது அகில உலகிலுமே பெரும்அதிர்ச்சியை உண்டு பண்ணுவதாயிற்று. இவரின் எதிர்பாராத மரணத்தினால் உலகம் ஈடு செய்யமுடியாத பெருநஷ்டம் அடைந்துள்ளது. இவர் கடங்காவின்ஜனாதிபதி ஷோம்பேயுடன் யுத்தநிறுத்தப்பேச்சு நடத்துவதற்காக ஒருசமாதானதூதுவராய்ச் சென்றுகொண்டிருந்தபோது இவர் பிரயாணஞ்செய்தவிமானம் தீப்பிடித்துநொறுங்கி விபத்துக்குள்ளானதால் இவருக்குமரணம் ஏற்படலாயிற்று. உலகசமாதானத்தைப் பாதுகாக்குமுகமாக நடைபெற்று வந்த போராட்டவரலாற்றிலே இவர்மரணம் ஒருபெரும் துக்ககரமானசெய்தியாகும். தமதுஇறுதி மூச்சுவரை உலகசமாதானத்திற்காக அரும்பாடுபட்டு உழைத்து வந்த ஓர்உத்தமரும், சமாதானப் பிரியருமான இவரின் மரணம்— அதிலும் இவரதுசேவை அத்தியாவசியகம் வேண்டியிருக்கும் ஒருசந்தர்ப்பத்திலே இவரின் அகால மரணம் ஐக்கியநாடுகளின் சபைக்குப் பரிகரித்தற்கரிய ஒருபாரிய நஷ்டமாகும். ஆயினும் இவர்நாமம் உலகசமாதானத்திற்காக உயிர்நீத்த உத்தமர்களின் நாமாவலியிலே ஓர் உந்நதஸ்தானம் வகிக்குமென்றும், உலகசமாதான சிற்பிகளில் இவர் நாமம் உலகவரலாற்றிலே பிரசித்தி பெறுமென்றும் சொல்லவேண்டியதில்லை.

நிற்க, இரண்டாவது உலகயுத்தம் முடிந்து இருபதுஆண்டுகள்தானும் இன்னுமேகடந்தபாடில்லை. அதனால்நேர்ந்த அனர்த்தங்களை மனிதவர்க்கம் இன்னுமே மறந்தபாடில்லை. அதற்குள் மற்றோர் உலகயுத்தத்தின் மயிரிழையிலே உலகம்இன்று ஊசலாடிக்கொண்டிருக்கின்றது. ஒருசிறுபொறிதானும் இந்தஉலகயுத்தத்தை மூட்டி விடக்கூடிய படுமோசமானநிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது. "யுத்தமா அன்றேல் சமாதானமா?" என்ற ஈரொட்டான ஒருநிலைமையிலே—அணுக்குண்டு யுத்தமொன்றின் அபாயகரமானவிளிம்பில் நிற்கையிலே — வல்லரசுக்கோஷ்டிகள் ஒன்றையொன்று அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற பெரிதும்அச்சத்துக்குரிய ஒருதருணத்திலே—அணு ஆயுதப்பரீட்சைகள் மீட்டும்தொடர்ந்து நடைபெறத்தொடங்கி உலகமக்களின் உளங்களைக் கலக்கிக் கொண்டிருக்கும் ஒருசந்தர்ப்பத்திலே பரிசுத்தபிதா 23-ம்அருளப்ப பாப்பரசர் உலகின்ஆட்சியாளருக்கெல்லாம் கனகாத்திரமிக்க ஒரு சமாதானவேண்டுகோள் விடுத்திருக்கின்றார். 1914-ம்ஆண்டு 10-ம்பத்திநாதபாப்பானவர் பரிந்துவிடுத்த சமாதானவேண்டுகோளை வல்லரசுகள் நிராகரித்தன. அதன்விளைவாய் முதலாவது உலகயுத்தம்மூண்டது. அதனால் உலகிற்குண்டான அனர்த்தங்களும், உயிர்ச்சேதங்களும் உரைக்குந்தரமன்று. பின்னர் 1939—ம்ஆண்டு 12—ம்பத்திநாதபாப்பானவர் உலகின்அபாயநிலையை உணர்ந்து ஒருசமாதானவேண்டுகோள்விடுத்தார். ஆயுதபலத்தினால் அல்ல, நியாயபலத்தினாலேயே நீதி ஓங்குகிறது; நீதியில்அடியிடப்படாத சக்கிராதிபத்தியங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டனவல்ல; சமாதானத்தினால் யாதொன்றுமே இழக்கப்படுவதில்லை; யுத்தத்தினால் யாவுமே இழந்துபோகப்படலாம்; அரசுகள் நல்லெண்ணத்துடனும், கண்ணியத்துடனும் தங்கள் பரஸ்பரஉரிமைகளுக்காகக் கலந்து பேசி உடன்பாட்டுக்குவர வேண்டும்; அப்போதுகௌரவமான ஓர்அனுகூலத்தைக் காணலாமென்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார் அப்போதும் அவரின் சமாதானவேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. அதனால் இரண்டாவது உலகயுத்தம்மூண்டது. முன்னிலும் கூடிய பயங்கரமான அனர்த்தங்களையும், உயிர்ச்சேதங்களையும் அது உண்டுபண்ணியது.

இன்று யுத்தஅபாயம் திரும்பவும் தலைகாட்டியிருக்கின்ற பெரும்இக்கட்டானநிலைமையிலே உலகின் பொதுப்பிதாவாகவிளங்கும் 23-ம் அருளப்பபாப்பரசரும் மன்னுயிர்கள்மேல் இரக்கங்கொண்டு உலகின் ஆட்சியாளருக்கெல்லாம் விடுத்திருக்கும் சமாதானவேண்டுகோளிலே, இன்னமும் நேரகாலம் இருக்கும்போதே யுத்தபேராபத்திலிருந்து காத்துக்கொள்ளுமாறு முழுஉலகையும் கேட்டிருக்கின்றார். யுத்தத்தால் உள்ளபடியே எல்லாம்இழந்து போகப்படுகிறது; எல்லோருக்குமே எல்லாம் இழந்துபோகப்படுகிறது; ஆனால், சமாதானத்தினாலோ யாதொன்றுமே இழந்துபோகப்படமாட்டாதென்று நன்மதியூட்டியிருக்கின்றார். வரலாற்றின் நீதி மன்றமுன்பாகவும், இன்னுமே மேலாய்த் தேவனது நீதிச்சிம்மாசனத்தின் முன்பாகவும் கொண்டிருக்கின்ற நீதியைஎதிர்நோக்குமாறு பலவேறுநாடுகளினதும் ஆட்சியாளர்களைக் கேட்டிருக்கின்றார். இயற்கையின் இரகசியங்களிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட இக்காலநவீன மாதிரியான பயங்கர ஆயுதங்களையும், அவற்றால் ஏற்படக்கூடிய அழிநாடுகள், பரிநாசங்களையும் எடுத்துக்காட்டி மக்களைஎச்சரித்திருக்கின்றார். யுத்தஅச்சுறுத்தல்கள் படிப்படியாக உச்சப்படியை நோக்கிச்சென்றுகொண்டிருக்கும் ஒருசந்தர்ப்பத்திலே பாப்பரசர் ஒருபிதாவுக்குரிய இரக்கசிந்தையுடன் விடுத்துள்ள சமாதானவேண்டுகோளின் இறுதியிலே சமாதானத்தின்இராக்கினியின் சலுகையை இரந்து, "வெற்றிகொள்ளப்பட்ட யுத்தங்களும், தோற்கடிக்கப்பட்டமக்களும் உலகத்துக்கு வேண்டியதில்லை; ஆனால், சமாதானத்தின் அமைதியே, வேண்டப்படுவ"தெனக்கூறி அதனை முடித்திருப்பது அவதானிக்கத் தக்கது என்க.

# இருளில் ஒளி

— 21 —

[எமது தெய்வத் திருச்சபை நாளும் பொழுதும் கத்தோலிக்கரல்லாதாரைக் கவர்ந்து உலகப் பொதுமறை ஆகிவரும் வரலாற்றுக்கதை இது.]

## சிறுமியின் சாதனை

திருமதி ஜோர்ஜ் கூக்எழுதுவது:

எனது ஐந்துவயதுப்புதல்வி மேரிஜீன் தவழத்தொடங்கிய காலத்திலிருந்தே என்னுடன் ஆலயத்துக்குச்செல்லத் தொடங்கிவிட்டாள். ஆராதனைவேளைகளில் ஆலயத்தில் பண்புடன் நடந்துகொள்வாள். எமதாண்டவரின்மட்டில் மேரிக்கு அதிகபற்றுதலும், பக்தியும் உண்டு.

ஒருதினம் எனக்குக்கிடைத்த தபால்களுடன் சிறியபார்சலொன்றும் காணப்பட்டது. தருமசபையொன்றுக்குஉதவியதற்குக் கைம்மாறாக அச்சபையினர் பாலகயேசுவின் சொரூபமொன்றை அனுப்பியிருந்தனர். நான்குஅங்குல உயரமுள்ள அவ்வுருவத்தின் வனப்பு என்செல்வியை ஆட்கொண்டது. எனவே, மேரிக்கு அதை அளித்துவிட்டேன். தான் செல்லுமிடமெங்கும் சின்னயேசுவைக் கொண்டு செல்ல அவள் மறப்பதேயில்லை.

சில மாதங்கட்குமுன்னால், லொஸ்ஏஞ்சலஸ் நகருக்கு விமானமூலம் யானும், மேரியும் பயணம்செய்தோம். அடுத்தஆசனத்தில் ஒரு வயதான மூதாட்டி அமர்ந்திருந்தாள். அந்த அம்மையாருடன் என் புதல்வி சரளமாகப் பேசிக்கொண்டேயிருந்தாள். சடுதியாகப் புயற்காற்று வீசியது. ஆகாயத்தில் எழுந்த கொந்தளிப்பினால் விமானம் மேலும்கீழுமாக ஆடிஅசைந்தது. சிலநிமிடங்கள் பிரயாணிகள் பலத்த இன்னல்களுக்குள்ளாயினர். மீண்டும் விமானம் அமைதியாகப் பறந்தது.

"நான் வெகுதூரம் பயந்துவிட்டேன். இதுதான் எனது முதலாவது விமானப் பிரயாணம்" என்றாள் அந்த மூதாட்டி. ஆயின், நான் அஞ்சவில்லையே. என்னிடம் சின்னயேசுவின் சொரூபம் உண்டு. அவர் எங்களைப் பாதுகாப்பார்" என மேரி பெருமிதத்துடன் கூறினாள். "முட்டாள்தனமான பேச்சு" என முணுமுணுத்தாள் அந்த அம்மையார். மேரியோ தனது சட்டைப்பையிலிருந்த கிறிஸ்துவின் உயிரோவியத்தை எடுத்துக்காட்டினாள்

"நீங்கள் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவர்களா" என வினவினாள் அந்த வயோதிபமாது. "நிச்சயமாக" என்றாள் மேரிஜீன். நல்லது, லொஸ்ஏஞ்சலஸ் நகரில்வசிக்கும் எனது புதல்வனிடம் செல்கிறேன். அவன் ஒரு அழகியநங்கையை விவாகம்செய்திருக்கிறான். அந்நங்கையும் உங்கள்மதத்தைச் சேர்ந்தவள். ஆயின், எனக்கு எந்த மதத்திலும் நம்பிக்கை கிடையாது. எந்தமதம் சிறந்ததென்பதையும் நான் அறியேன்" எனக்கூறிய அம்மூதாட்டி லொஸ்ஏஞ்சலஸ்நகரில் எங்களைப் பிரிந்தாள்.

அந்த அம்மையார் தனது புதல்வனின் இல்லத்தில் கத்தோலிக்கத்தின் உண்மைவனப்பைக் கண்டிருக்கவேண்டும். ஏனெனில், அண்மையில் எனது புதல்விக்கு அவர் அனுப்பியலிகிதம் பின்வருமாறு கூறுகிறது:

ஒருசிறுமி சரியானபாதையை எனக்குக்காட்டினாள். இன்றுயானும் அதேவழியில் செல்கிறேன். பலவருடங்களின்பின்னர் இப்போதுதான் உண்மையான இன்பத்தை அனுபவிக்கிறேன்.

(சா. பெ.)

# சிவப்புநாட்டிலே கிறிஸ்தவர்களின் அவதி

அண்மையில் ரூஷியா சென்று திரும்பிய ஒரு கத்தோலிக்க நிருபர், கீழ்க்காணும் உளமுடைக்கும் செய்தியைத் தருகின்றார்: "தாய்த் திருச்சபைக்கு விரோதமாகச் சென்ற ஓராண்டளவாகப் பெரும்போர் ஒன்றைத் தொடங்கியுள்ளது செங்காடி. சிலவிடங்களில் மக்கள் தங்கள் ஆலயங்களைக் காப்பாற்ற நேருக்குநேர் சண்டையிடவும் துணிந்தனர். குருக்களின்மேல் தாளமுடியாத வரி சுமத்தப்பட்டுள்ளது. ஆலயங்களை மூடப் பல வழிகளையும் கையாண்டு வருகின்றது செங்காடி. வீடுகளிலிருந்த தனி ஆலயங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன."

மொஸ்கோ, கியவின், ஒடெஸ்ஸா, பால்டா ஆகிய நகரங்களைத் தரிசித்த இந்நிருபர் மேலும் கூறுகின்றார்: "திறந்திருக்கும் ஓரிரண்டு ஆலயங்களில் மக்கள் திரண்டு வருகின்றனர். சிறப்பாகக்கிழவிகளும், மத்திய வயதுள்ளபெண்களும், வாலிபர்களும் ஆலயத்துக்குச் செல்லாமல் தடைசெய்யப்பட்டுள்ளனர். பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்தவர்களில் அநேகர் சமயவாழ்வு வாழ விழைந்தபோதிலும், பயத்தினால் கோழைகளாய் வாழ்கின்றனர். புத்தக சாலைகளில் சமயமும் விஞ்ஞானமும் ஒன்றுசேர இயலாது' என்ற விளம்பரங்கள் மிதந்து கிடக்கின்றன. சமய புத்தகங்கள் ஒன்றுவது எங்குக்காணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்குப் பின்வரும் 19-ம் ஞாயிறு

திருச்சபை தன் மணவாளனாகிய கிறிஸ்துவுடன் எப்படி ஒன்றாகின்றது என்பதை இன்றைய பூசைப்பொருள் துலக்கி நிற்பதை நாம காண்கிறோம். மோட்ச பாக்கிய உடையைத் தரிக்க வேண்டுமாகில், திருச்சபையின் அங்கத்தவர் ஒவ்வொருவரும் தற்பொழுதே இஷ்டப்பிரசாத உடையைத் தரிக்க வேண்டியவராகிறார். யேசுக்கிறிஸ்துவே இந்த இஷ்டப்பிரசாத உடை, இந்தக் கலியாண வஸ்திரத்தை அணியாதவர்களுக்குக் கலியாணவிருந்தில் இடமில்லாமல்போகும்.

### செபமும் போதனையும்

பிரவேச கீதம் வைத்திய சாஸ்திர நிபுணர்களாக விளங்கி வேதசாட்சிகளாக முடிசூட்டப்பெற்ற அர்ச். கொஸ்மாஸ் டமியான் (புரட். 27) என்னும் சகோதரர்களுடைய பூசையில் இருந்து எடுக்கப்படுகிறது. அவர்கள் ஆத்துமத்தினதும், சரீரத்தினதும் சுகத்தைப் பாதுகாக்க ஆவல் உடையவர்களாய் இருந்தார்கள். பிரதம வைத்தியனாகிய கிறிஸ்துவிடம் எமக்கு ஆத்தும சரீர சுகத்தை அருளும்படி இன்றைய பிரவேச வாக்கியம் வேண்டுகின்றது; "சனங்களின் இரட்சணியம் நாமே, அவர்கள் எந்தத்துன்ப வருத்தத்திலும் நம்மை நோக்கிக் கூப்பிடினும் நாம்அவர்களுக்குச்செவி கொடுப்போம்." தீய செயல்களை விருப்பமின்றி இருக்கும் மக்கள்மேல் திணிப்பவர்களுக்கு எதிராக இங்கு மறுமொழி வெளியாகின்றது. ஏனெனில், தமது மக்களின் உண்மையான ஒரே வழிகாட்டியை இங்கு நாம் காண்கிறோம். சபைச் செபமும் எங்களுடைய ஆத்தும சரீர நன்மைகளுக்காக வேண்டிச் சகல துன்பங்களின் மத்தியில் நின்று நீக்கித் தம் அருளில் வைத்து எம்மைக் காப்பாற்றும்படி தேவனிடம் வேண்டுகிறது. ஒவ்வொரு திருமண ஒன்றிப்பும் நேசிப்பதற்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நாம் சாகுமளவும் நன்மையான வழியில் நிறைவேற்றப் புத்துயிர் அளிப்பதாக இருக்கின்றது. ஆனால், ஆத்துமத்துடனோ, அல்லது திருச்சபையுடனோ நடக்கும் கிறிஸ்துவின் திருமண ஒன்றிப்பைச் சாவு பிரிக்கமுடியாது. மேலான சீவியத்திற்கு எம்மை உயர்த்தும் கருவியே சாவு. இந்த மேலான அந்தஸ்தை அடையும்வரை எமது சீவியத்தைப் புதுப்பித்தல் எமது தொழிலாக இருக்கவேண்டும் (நிருபம்). எமது மனதையும் இருதயத்தையும் யேசுவில் புதுப்பிப்பதின்மூலம் அவர்பால் எமக்கு உள்ள அன்பைப் புதுப்பிக்க வேண்டுகிறது இஷ்டப்பிரசாதத்தில் புது மனிதனாகியவனுடைய அன்பிற்குப் பழைய மனிதனின் பாவமும், துன்பமும், புண்பட்டமையும், கீழானவையாக இருக்கின்றன. அன்பினதும் அதைப் புதுப்பித்தலினதும் பல அடையாளங்களைச் சுவிசேஷம் கொண்டுள்ளதாய் இருக்கின்றது. கலியாண விருந்து, கலியாண வஸ்திரம், அழைத்தலின் பெருமை என்பனவற்றை நாம காண்கிறோம். அழைக்கப்பட்டவர்களோ அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சொற்பப்பேர். எங்களுடைய சொகுசான, உலகசார்புடைய வழிகளுக்கு எதிராக இது ஓர் குற்றச்சாட்டாக இருக்கிறதல்லவா? எங்கள் தோட்டம் துறைகளும், காணிபூமிகளும், இயந்திரங்களும் அவற்றைப் பொறுத்தவரையில் நல்லவைகளாய் இருந்தாலும், அவை இல்லாதவர்களுடைய வெறுப்புடன் தொடர்புபடுத்தும்போது கூடாதவைகளாகின்றன. இந்தப் பொருட்களெல்லாம் எம்மை அன்பின் திருமண வைபவத்திலிருந்து பிரித்துவைக்கக் கூடியனவாக இருக்கின்றன. உண்மை, எமக்குக் கேட்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது கண்டு நாம் சிலவேளை தேவனின் வார்த்தையை எமக்குப் புகட்ட அனுப்பப்பட்டவர்களைத் தொந்தரவு செய்யவும் கூடும். ஏழைகளும், தீயவர்களும் கொண்டாட்டத்துக்கு அழைக்கப்பட்டார்கள். நாம் இஷ்டப்பிரசாதத்தில் பெருக்குள்ளவர்களாயிருந்து அவசியமான திருமண வஸ்திரத்தைக் கடைசிமட்டும் அணிபவர்களாக இருக்க வேண்டுமாயின் நாம் விசேஷமாக எம்மிலும் பார்க்கக் குறைய வைத்திருக்கிறவர்களைக் கிறிஸ்துவின் நன்மைத்தனத்தில் எம்முடன் இன்புறுமாறு அழைத்தலின்மூலம் கேட்க வேண்டும்.

### நற்கருணைச் சடங்கு

தேவனோடு எங்கள் இருதயத்தையும் மனதையும் ஒன்றிப்பதற்கு அதிக முயற்சி தேவையல்ல. கலியாண விருந்தை நிறைவேற்றுதல் என்னத்தைக் குறிக்கின்றது என்று பின்வருவனவற்றின் மூலம் காணலாம். காணிக்கை கீதம் தேவனின் கரம் பகைவர்களின் கோபத்திற்கு எதிராக நீட்டப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடுகின்றது. கிறிஸ்துநாதரின் மணவாட்டியாகிய திருச்சபையைத்தான் பகைவர்களிடம் இருந்து இரக்கம் இரட்சிக்கின்றது. இதுவே, மெய்யான அன்பின் வாக்குறுதி. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு பூசையும் கிறிஸ்துநாதர் மெய்யாகவே திருச்சபையின்மேல் கொண்ட இடைவிடா அன்பை உறுதியாக நினைவூட்ட வேண்டுமென்று அமைதிமன்றாட்டும், வசீகரப்பகுதியும் குறிக்கின்றன. அமைதிமன்றாட்டு நாங்கள் எல்லோரும் கிறிஸ்துநாதரோடு, முழுமனதோடும், இருதயத்தோடும் ஒன்றித்திருக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றது. தேவனின் விருந்துக்கு அழைக்கப்பட்டோர் அநேகர். ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டோர் சொற்பப்பேர். அனுபவிப்புப் பகுதி இந்த அழைத்தலைத் துலக்கிக் காட்டுகின்றது. ஏனெனில், ஒவ்வொரு அழைப்பும் அன்பின் அழைப்பு இந்தஅழைப்பைப் பெறுவோர் மற்றவர்களிடமிருந்து தெரிந்து எடுக்கப்பட்டோர். ஆகவே, கிறிஸ்துவின் பிரமாணங்களை வெகு கிரமமாய் அனுசரிக்க வேண்டும். அனுபவிப்புக்குப் பின்வரும் செபம் சொல்லுவதுபோல், நாம் கிறிஸ்துநாதருடைய கற்பனைகளைப் பின்பற்ற வேண்டும்; "ஆண்டவரே, எங்களை ஆசாபாசங்களில் நின்று காப்பாற்றித் தேவரீருடைய கற்பனைகளை எப்பொழுதும் இடைவிடாமல் பின்பற்றச் செய்தருளும்."

சுவாமி மைக்கல் ஜேட்றிக்கோ

---

கிடைக்கவில்லை. ஆனால், குடும்பங்களில் செபப் புத்தகங்களும் விவிலிய நூல்களும் பொன்னெனப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவனாவது வாழ்க்கையளவில் கிறிஸ்தவனாக உள்ளான். ஆலயத்திற்குச் செல்லவியலாது தடைசெய்யப்பட்டுள்ளனர் வாலிபர்கள். தங்கள்பெற்றோரையோ மற்றவரையோ ஆலயத்திற்குச் சென்று தங்களுக்காக மன்றாடும்படி கேட்டுக்கொள்கின்றனர். இதுவே எதிர்காலத் திருச்சபையின் பெரும் நம்பிக்கை என்று ஒரு குரு தெரிவித்தார். ரூஷிய நாட்டிலே மக்கள் அறிவுத் தாகத்தால் அவதியுறுகின்றனர். இந்தத் தாகம் அவர்களை அவசியம் நித்திய நீரூற்றாகிய இறைவனடி கொணர்ந்தேதீரும்."

---

# தற்காலத்துக்கேற்ற நற்தூது

"உமது நோக்கை ஏராளமான சிறு ஆத்துமாக்கள்மேல் திருப்பும்படி உம்மை இரந்து மன்றாடுகிறேன்; உமது அன்பிற்குத் தகுதியான சிறு பரித்தியாகிகள் படையொன்றை இவ்வுலகத்தில் தெரிந்துகொள்ளும்படி உம்மை வேண்டுகிறேன்."



இச்சிறு செபத்துடன் அர்ச். சின்னமலர் தமது தற்சரிதையை முடிக்கிறாள். இவ்வுலகைப்பிரிந்து முத்தி சேருகிறாள். அவ்வேளையிலிருந்து திருச்சபைச் சரித்திரத்தில் கண்டு கேட்டிராத அளவிற்குக் கர்த்தர் தெரேசம்மாளின் தூதை உலகறியச் செய்திருக்கிறார். இத்தூது என்ன? மேற்கூறிய வேண்டுதலின் நிறைவு அன்றோ. இவ்வேண்டுதல் நிறைவேறக் கடவுள் தெரிந்துகொண்ட வழி தெரேசம்மாள் தாமே.

அவள் முத்திசேர்ந்ததிலிருந்து தமது ஞானப்பாலத்துவம் எனும் சுருக்கவழியினால் எண்ணிக்கையற்ற சிறு ஆத்துமாக்களை எமது ஆண்டவர் பக்கமாய்க் கவர்ந்திருக்கிறாள்—அவருடைய அன்பிற்குத் தகுதியான சிறு ஆத்துமாக்கள்படை. எப்படிக் கவர்ந்தாள்? தமது பரலோக தங்கையாகிய கடவுளைப்பார்த்துச் சிறு பிள்ளைகள்போற் செபிக்க உலகத்தின் பல ஆத்துமாக்களுக்குப் படிப்பித்திருக்கிறாள். ஏனெனில் சிறுவழிச் செபமுறையே ஞானப் பாலத்துவத்தின் வழி.

எமது புனிதரின் இலகுவான செபவழியால் கவரப்பட்ட பல ஆத்துமங்கள் உலகத்தின் எப்பாகத்திலுமுள்ள சந்நியாசசபைகளில் வந்து சேருகின்றனர். எமது நாட்டிலும் பிறதேசங்களிலுமுள்ள குருமார்பலர் தமது அழைத்தலுக்கு அர்ச். தெரேசம்மாளே காரணம் எனக்கூறுவர். தமது வாழ்க்கையை நடத்த ஏவுதல் ஞானப் பாலத்துவ வழியும் புனித தெரேசாவின் இலகுவான செபமுறையும் என்பர். இப்படி ஆண்டுகள் தோறும் பூசைப்பலிகளை—செபங்களில் உத்தம செபத்தை—பெருக்கிக்கொண்டேயிருக்கிறாள் சின்னத் தெரேசம்மாள்.

விசுவாசிகளில் எத்திறத்தோரும் அவளுடைய காந்தசக்தியாற் கவரப்படுகின்றனர். பக்தியுள்ளவர்களை மேலும் பக்திவேகத்துடன் இலகுவாய்ச் செபிக்கும்படி ஏவுகின்றாள். எவ்வகையினாலும் கவரமுடியாத வேண்டா வெறுப்புள்ளோரைத் தன்னுடைய எளிய போக்கினால் கவர்ந்து அமலன்பாதத்தில் அமரச் செய்கிறாள். அவளுடைய இயல்பான அன்புப்பெருக்கினால் நல்லுற்றோர் ஆறுதலடைகின்றனர். தத்துவார்த்தந்தேடும் ஞானிகள், தொடக்கத்தில் வெறுத்தாலும், அவளுடைய பிள்ளைத்தன்மையால் வெற்றிகொள்ளப்படுகின்றனர். கொடும்பாவிகள் தமக்கு நேர்எதிரான வாழ்க்கையால் உந்தப்பட்டு, அவளுடைய சுத்த அன்பினால் ஆட்கொள்ளப்படுகின்றனர். எல்லோரும் பரமதந்தையிடம் பிள்ளைகள் சொல்வதுபோல், செபிக்கக் கற்றுக்கொள்ளுகின்றனர்.

எனவேதான் அர்ச்சியசிஷ்டபட்ட வைபவத்தின்போது செய்த பிரசங்கத்தின்முடிவில், "ஞானப்பாலத்துவ மார்க்கம் எங்கும் பரந்தால், எமது ஆளுகையின் ஆரம்பத்தில் நாம் கொண்ட குறிக்கோளான சமுதாயப் புனரமைப்பு எளிதில் நிறைவேறும் என யார்தான் உணரமாட்டார்கள்? என்று 11-ம் பத்திநாதர் கூறினார். ஆகவே, தெரேசாள் தமது தற்சரிதையை முடித்துக்கூறும் வேண்டுதலை எமதாக்கிக் கொள்கிறோம் என்கிறார். அதாவது, "உமது நோக்கை ஏராளமான சிறு ஆத்துமாக்கள்மேல் திருப்பும்படி உம்மை இரந்து மன்றாடுகிறோம். உமது அன்புக்குத் தகுதியான சிறு பரித்தியாகிகள் படையொன்றை இவ்வுலகத்தில் தெரிந்துகொள்ளும்படி வேண்டுகிறோம்."

---


வெளிவந்திருக்கின்றன! விற்பனையாகின்றன!!

## ஞானோபதேசப் பாட நூல்கள்

| | |
|---|---|
| பாலர் குறிப்பிடம் (2-ம், 3-ம் வகுப்புக்குரியது) | 1-00 |
| சின்னக் குறிப்பிடம் (1-ம் பாகம்) 4-ம் வகுப்பு | 80 |
| ,, ,, (2-ம் பாகம்) 5-ம் வகுப்பு | 80 |
| பெரிய குறிப்பிடம் (1-ம் பாகம்) 6-ம் வகுப்பு | 75 |
| ,, ,, (2-ம் பாகம்) 7-ம் வகுப்பு | 75 |
| ,, ,, (3-ம் பாகம்) 8-ம் வகுப்பு | 75 |

மனேஜர்:
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

அன்புத் தம்பி, தங்கையரே!

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (3-10-61) 'சின்னமலர்' என்று செல்லமாய் அழைக்கப்படும் அர்ச். சின்னத் தெரேசம்மாளின் திருநாள் கொண்டாடப்படும். இளம் வயதிலேயே மோட்சமுடி பெற்ற இக்கன்னிகையை நீங்களும் கண்டு பாவித்து, அவள் அனுசரித்த புண்ணியங்களை நீங்களும் அனுசரிக்க அவளது உதவியை மன்றாடுங்கள்.

அன்புள்ள அண்ணா.

## என்தேவனை மறுதலிப்பதைவிட எனக்கு மரணம் தாவினை

(உண்மைச் சம்பவம்)

கல்தேயாவில் உள்ள ஓரிம் என்ற பட்டணத்தில் சில வருடங்களுக்கு முன் ஒரு கத்தோலிக்க குடும்பத்தார் இருந்தனர். அவர்கள் அப்பட்டணத்தில் உள்ளோருக்கு ஒரு மேல்வரிச் சட்டமாக விளங்கினர். குடும்பத்தின் தலைவர் போல்சாதியான். இவர் தம் குடும்பத்துடன் வேலையின் நிமித்தமாகப் பார்சியா தேசத்துக்குச்சென்று 'ஷா' என்ற மன்னரிடம் வேலையில் அமர்ந்தார். அவர் பார்சியர் பட்டாளத்தில் சேனைத்தளபதியாகி அரசனுக்காகச் சண்டையில் மரணமடைந்தார். அவரது பிள்ளைகள் பார்சியாநாட்டிலும் உத்தமர்கள் எனப் பெயரெடுத்தனர். அவர்களில் ஒருவனுன சூகன் என்பவன் போர்வீரனுகி அரசனிடம்வேலையில் அமர்ந்தான். எல்லாரையும் விட அவன் மகா தைரியமுள்ளவன். ஒரு நாள் இவனுடைய வீரத்தன்மையை அறிந்துகொண்ட அரசன் மகிழ்ந்து அவனை அழைத்து, "நீ உன் சமயமாகிய கத்தோலிக்கத்தை மறுதலித்து விடுவாயாகில், உன்னை உயர்ந்த அந்தஸ்தில் அமர்த்துவேன்" என்றுன். அதைக் கேட்ட அந்த இளம் வாலிபன் அரசனைப் பார்த்து, "அரசே! என்நேசத்தகப்பனுர் உமக்காக யுத்தத்தில் தம்முடைய பிராணனை இழந்தார். நானும் என் பிராணனை இழக்கத் தயாராயிருக்கிறேன்; இதோ, என் வாளும், கத்தியும்; அரசே! நீரே என்னைக் கொன்றுவிடும்; என் தேவனை மறுதலிப்பதைவிட எனக்கு மரணம்தாவினை" என்றுன். இதைக்கேட்ட ஷா மன்னன் அவனுடைய மதப் பற்றை மெச்சிப் பட்டாளத்தில் பெரிய உத்தியோகத்தையும் கொடுத்தான்.

ஆதலால், நாமும் மதப்பற்று உடையோராய் இருத்தல்வேண்டும். "என் தேவனை மறுதலிப்பதை விட எனக்கு மரணம் தாவினை" என்று கூறிய அந்தப் போர்வீரனைப்போல் நாமும் வேதத்தை மறுதலியாமல் இருக்கவேண்டும்.

— R. இராசையாபிள்ளை

## சிறுவர் அறிவுச் சக்கரம்—7

முடிவுதேதி 9-10-61

— I —

1. சமையற்காரரின் பாதுகாவலர் யார்?
2. பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கதரிசியின் பெயர் என்ன?
3. கடைசியாக அர்ச்சியசிட்ட பட்டம் சூட்டப்பட்ட பாப்பரசர் யார்?
4. 'அதிதூதரான அர்ச். மிக்கேலே' என்று பூசையின்பின் சொல்லப்படும் செபத்தை இயற்றியவர் யார்?
5. சுவிசேஷங்களைக்கிரேக்கமொழியிலிருந்து முதன்முதலில் இலத்தீனில் மொழிபெயர்த்தவர் யார்?
6. தொழிலாளரின் சாசனம் (ரேறும்நோவாறும்) எனும் பொதுநிருபத்தை வெளியிட்டவர் யார்?

— II —

1. மாசில்லாக் குழந்தைகளின் திருநாள் எப்போது கொண்டாடப்படுகின்றது?
2. சுவிசேஷ பாக்கியங்கள் என்றால் என்ன?
3. ஞாயிற்றுக்கிழமையை நாம் பரிசுத்தமாய்ச் செலவிட விசேஷமாய் விலக்க வேண்டியவைகள் எவை?
4. சவுல் அரசனுக்குப்பின் இஸ்ருயேலரது அரசனுனவர் யார்?
5. தொபியாசுக்கு வழித்துணையாய்ச் சென்ற தேவதூதன் யார்?
6. முதலாவது வத்திக்கான் பொதுச்சங்கம் எப்போது நடைபெற்றது?

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

**சிறுவர் அறிவுச் சக்கரம்—7**

**பிரவேசப் பத்திரம்**

பெயர்: ....................

....................

வயது: ....................

விலாசம்: ....................

....................

குறிப்பு: போட்டிக்குரிய விடைகள் யாவும் 9-10-61-க்குப் பிந்தாமல் பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பப்படவேண்டும். முடிவு தேதிக்குப் பின்; அல்லது பிரவேசப் பத்திரமின்றி அனுப்பப்படும் விடைகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

எனக்குப் பிடித்த அர்ச்சியசிட்டர்

## அர்ச். யோண்பொஸ்கோ

கலங்கியவர்களின் மனதைத் துலக்கிவிடுபவர்; சாதுரியமாய்ப் பேசிக் கருத்தை உணரும் சக்தியின் நிறைவு; அனுதைகளின் தந்தை; தேவதொண்டரின் முன்மாதிரிகை; வாலிபரின் வழிகாட்டி; சிறுவரின் அன்பர்.

ஆம், இத்தனை புகழுக்கும் உரியவரான அவர் யார்? அவர்தான் அர்ச். ஜோண்பொஸ்கோ.

1815-ம் ஆண்டு ஆவணிமாதம் 16-ந் திகதி இத்தாலியின் வடபாகத்தில் "பியமோனத்தே" என்ற இடத்தில் பெக்கி என்ற சிற்றூரில் அர்ச். யோண்பொஸ்கோ மார்கரீத் ஒக்கியேனுவுக்கும், பிரான்சிஸ் பொஸ்கோவுக்கும் அருந்தவப் புதல்வனுய் அவதரித்தார்.

"விளையும்பயிரை முளையிலேதெரியும்" என்ற ஆன்றோர் அறிவுரைக்கிணங்கக் கல்வியிலே திறமை பெற்றுப் பலராலும் வியந்து பாராட்டப்பட்டார்.

பண்புநிறை அன்னையின் பாதுகாப்பில் வளர்ந்த அன்பின்உருவான அர்ச். யோண்பொஸ்கோ ஞானத்திலே அபார திறமை பெற்று விளங்கினுர்.

பரலோக அன்னை மாமரியின் ஞான அரவணைப்பிலே வளர்ந்த அர்ச். யோண்பொஸ்கோ பல நெருக்கிடைகளையும் வென்று தேவஊழியமான குருத்துவத்தைப் பெற்று ஒரு குருவானுர்.

இயன்றளவு ஞான மேய்ப்பனுகப் பலகாலம் கடமையாற்றினுர் இரக்கத்தின் இருப்பிடமாம் யோண் பொஸ்கோ.

பின்னர் இறைவனின் அழைப்புக்கிணங்க 1881-ம் ஆண்டு தைமாதம் 31-ம் திகதி தமது 73-ம் வயதில் இறைவனடி சேர்ந்தார். இவர் திருச்சபையால் 1934-ம் வருடம் சித்திரைமாதம் 1-ம் திகதி அர்ச்சியசிட்டபதவிக்கு உயர்த்தப்பட்டார்.

எஸ். ஆர். ராஜபாலன்,
அர்ச். யோண்பொஸ்கோ கழகம்,
ஊர்காவற்றுறை.

அர்ச். அந்தோனியார்

## தருமக்கோணம்

கேட்ட நன்மைகள் அனுகூலமானதினுல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

கல்பிற்றி: எல். ஜி. குருஸ் 2-00, எஸ். பி. கோயிஸ் 4-00—முள்ளிக்குளம்: எம். எஸ். குருஸ் 6-00, ஜி. எஸ். குருஸ் 1-00, ஏ. ஆமினு 2-00—கல்கமுவா: ஆர். சுவக்கின் 2-00, வி. சந்தியாப்பிள்ளை 1-00, எல். எலியாஸ் -50, ரி. ஜேற்றூட் 1-00, ஏ. அக்னேஸ் -50—சக்கோட்டை: எஸ். சந்தியாப்பிள்ளை 2-00, எஸ். அன்னம்மா 3-00, பி. அந்தோனிக்கம் 2-00 — சில்லாலை: ஜே. மேரி யோசேப்பின் 5-00—எட்டியாந்தோட்டை: மேரியம்மாள் 1-00 — கொற்றன்தீவு: மிஸ் ஆர். எம். பி. பிள்ளை 6-00, ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 4-00—முல்லைத்தீவு: எம். அருளானந்தம் 5-00, எஸ். எம். இளையதம்பி 2-00 — அரிப்பு: ஏ. பிலிப்பு 5-00—நீர்கொழும்பு: ஏ. மெலோ 3-00, மிசெஸ் ஏ. வில்லவராயன் 3-00, ஓ. எக்ஸ். பெர்னுண்டோ 10-00, எஸ். ஜி. செல்லத்துரை 5-00 — யாழ்ப்பாணம்: வண. சூரவர் 10-00, ஓர் உபகாரி 1-00, எஸ். சவிரிமுத்து 1-00 — மன்னம்பிட்டி: வி. எம். ஜே. கந்தையா 2-00—கொழும்பு: ஜி. அந்திரேஸ் 3-00 — இற்றுலை: ஏ. ஈ. லீயோ 5-00, பிறுங் எல். லீயோ 5-00, பிறுங் அன்ரன் 2-00 — மிருசுவில்: ஏ. எஸ். தைரியநாதர் 2-00, பி. ஜே. சிறில் 1-00—செட்டிகுளம்: ஜே. இராயப்பு 5-00 — குருணுகல்: ஜி. எஸ். சின்னத்துரை 1-00 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00 — மங்கேலியா: ஞானதிக்கம் 2-00 — டிம்போடிரு: பி. எவ். சூசைப்பிள்ளை 1-00 — தலவாக்கொல்லை: ரி. ஏ. குருஸ் 2-00—மன்னுர்: சி. ஏ. வி. பத்மராஜா 1-00 — பேசாலை: பி. கே. பாய்வா 10-00 — புத்தளம்: ஏ. புஷ்பராணி 3-00 — சுண்டிக்குளி: எல். அந்தோனிப்பிள்ளை 2-00 — மதிச்சுக்கட்டி: எல். எம். பதுனுந்து 1-00 — மஸ்கேலியா: எம். சின்னையா 1-00, எம். ஏ. கறுப்பையா 2-00 — நேரியகுளம்: ஜி. இன்னப்பு 1-00.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3497

கிளிநொச்சி
காலஞ்சென்ற நல்லான் குப்பனின் ஆதனத்துக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் T 529-ம் இலக்க வழக்கில் தத்துவகாரனுக நியமிக்கப்பட்ட சரவணையைச்சேர்ந்த தம்பையா தருமலிங்கம்
— வழக்காளி.

எதிராக
யாழ்ப்பாணம் நீராவியடி
சின்னையா முருகேசு — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 3497-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணியை 1961-ம் ஆண்டு நவம்பர்மாதம் 11-ந்திகதி சனிக்கிழமை காலை 11மணி தொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 16,562-உம், 8-7-60 தொடக்கம் முழுத் தொகையும் இறுக்கும்வரை 5%வட்டியும், கோட்டுச்செலவு 339ரூபா 25சதமும்.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் கரைச்சிப்பிரிவு கரைச்சிக்கோயிற்பற்று, முரசுமோட்டையிறை, "முரசுமோட்டைக்காடு" ஏக்கர் 20-ல் வடக்குப்பக்கமாக நிந்தமாக 10ஏக்கர். இந்தப் 10ஏக்கருக்கும், எல்லை: கிழக்கு — குப்பநேரி ஆற்றுக்கட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள முடிக்குரிய ஆதனம். வடக்கு — சின்னையா முருகேசுவின் ஆதனம். மேற்கு — வாய்க்கால். தெற்கு — சின்னத்தம்பி சரவணமுத்துவின் ஆதனம். இதடங்கலும் B 46/34இன்கீழ் பதிவுசெய்யப்பட்டது.

ஆ. வெற்றிவேலு,
கொமிஷனர்.

இல. 19, வேம்படிவீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

## யேசுவின்சிறியபுஷ்பம்

### வேதபோதக நாடுகளின் பாதுகாவலர்

(திருநாள்: ஐப்பசி 3-ந் திகதி)

நறுமணமலர்களுள் உரோசா ஓர் இராசமலர்; அழகுமலர். அதனைப் போலவே அழகும், ஞானவாசனையும் நிறைந்து பொலியும் வண்ணப்பொன் மலர் எங்கள் சின்னத்தெரேசா. தாய்மையானஎழில், செம்மையான இதயம், தேவமணங்கமழும் புனிதஉடல் அவளது பிறப்புரிமைகள்.

பாலபருவத்திலேயே கன்னிமையைப் பாதுகாக்கவேண்டுமென்ற பேரவல் அவள்உள்ளத்தில் வெள்ளமெனப் பிரவகித்துக்கொண்டிருந்தது. பகலவனின் கதிரொளியில் மலர்முகை இதழ்விழ்தல்போல் அவள் இதயமும் கடவுளன்பில் மலர்ந்து பரிமளம்பொழிந்தது.



"நான் என் தேவனை நேசிக்க வேண்டும்; அவர் ஒருவரையே என மனச் சிங்காசனத்தில் இருத்திப் பூசிக்க வேண்டும். அவர் பொருட்டு எவ்வித இன்னலையும் எப்போதும் முழுமனதோடுமேற்க நான் ஆயத்தமாயுள்ளேன். என் நேசதேவனின் பலிபீடத்தில் கொழுந்துவிட்டுச் சுவாலித்தெரியும் ஒருமெழுகுவர்த்திபோலப் பிரகாசிக்க நான்என்றும் ஆசிக்கிறேன்" என, கார்மேல் கன்னியர்மடத்தில் புகுந்தபோது சின்னத்தெரேசாள் புகன்ற மதுரிதமொழிகள் அவளது தேவநேச வாஞ்சைப்பெருக்கைப் பிரதிபலிக்கின்றன.

"நான் இப்பூவுலகைநீத்துப் பரலோகஞ் செல்வேன். ஆனால், அங்கிருந்து பூலோகமக்களுக்கு உரோசாமலர்மாரி சொரிவேன்" என்று அவள் திருவாய் மலர்ந்த புனிதமொழிகள் இப்பூவுலக மக்களாகியஎமக்கு மகிழ்ச்சியும், ஆறுதலும் வருவிக்கும் குளிர் ஊற்றுக்களாய்க் காண்கின்றன.

சுகிர்த புண்ணியங்களின் தங்கச் சுரங்கமாகிய மாட்டீன்தெரேசாவைப் பிரான்சுதேசம் பெற்றெடுக்கும் பெருந்தவஞ்செய்தது. பாலபருவத்திலேயே கன்னிமைநேசன்பு அவளிடம் நிறைவு பெற்றது. தேவன் தன்னிலும், தான் அவரிலுமாக ஒருமித்து வாழவேண்டுமென்ற உன்னதநோக்கினை உலக சுகங்களைத் துரும்பென உதறித்தள்ளினாள். தன் உள்ளக்கிடக்கையைப் பலரிடமும் வெளியிட்டாள். "நீ சிறுகுழந்தை". "உனக்குக் காலமுண்டு" "ஏன் அவசரப்படுகிறாய்?" என்றுபலரும் பலவாறு அவளுக்குப் புத்திபுகன்றனர்.

வண்ணச்சிறகடித்து வானத்தை நோக்கிப் பறக்க வேண்டுமென எண்ணங்கொண்ட சின்னஞ்சிறு குருவிக்கு வாஞ்சைதணியவில்லை.

பரிசுத்த பாப்பரசருக்குத் தனது மனக்கிடக்கையைத் தாழ்மையோடு தெரிவித்தாள். உத்தமதந்தையின் உத்தரவுங்கிடைத்தது. தன் பாலியவாழ்வைத் தேவனின் பாதாரவிந்தங்களில் அர்ப்பணித்துப் பரமானந்தத்துடன் கார்மேல் கன்னியர்மடம் புகுந்தாள்.

'இலைமறை காய்போல்' அங்கு புண்ணியநெறியில் தலைமறைவாய் வாழ்ந்தாள். தாழ்ச்சிக்கோருறைவிடமானாள். சாந்தமும், கீழ்ப்படிவும் அவள் சற்குணங்களாயிலங்கின. தற்பரித்தியாகக் கிருத்தியங்களில் அவளது வீரத்துவம் மிளிர்ந்தது. ஓயாதசெபத்தில் அவள் ஓய்வெடுத்தாள். தேவநேச அக்கினியால் தகனிக்கப்பட்டு மங்காதகற்பினுக்கோர் மகுடமானாள். யேசுவின் நேச வதனத்தைத் தன் தூயமனத்திரையில் அழியாத் திருஓவியமாகத்தீட்டி அஞ்சலி செய்துவந்தாள்.

அரைக்கஅரைக்க நறுமணம்பரப்பும் சந்தனம்போல், தீநாக்குகளின் மத்தியில் பரிமளம்எழுப்பும் அகிலினைப் போல் மாணித்தஅன்றே "தெரேசா" என்ற பூசிதநாமம் உலகின் எட்டுத் திக்குகளுக்கும் எட்டிப்பரவியது. பூரணவெண்மனதுடைய அவளது புகழ்த்தாரகை வானவீதியில் வலம்வந்தது. "தேவஆசீர்வாதத்தின் புத்திரி" என்று பூவுலகு அவளைப்போற்றிப் புகழ்ந்தது. அவள்பெயரால் பரலோகத்திலிருந்து வரப்பிரசாத மலர்மாரி மழைமாரியாகப் பொழிந்தது. எங்கும் அர்ச். சின்னத்தெரேசம்மாளின் அற்புதசிவியம் பரம்பியது. போர்க்களத்தில் போர்புரியும் வீரர்தானும் புதிய புனிதகன்னிகையைத் தம்பாதுகாவலாக்கினர். பிரான்சிய விமானிகள் சின்னமலரைத் தமக்குரிய அர்ச்சியசிட்டவளாக்கினர். குருமார் தம்மைப் பாதுகாக்கும் கேடயமாக அந்தப்பாலிய கன்னியைச் சரணடைந்தனர். வேதப்பரப்புதல்சபையார் தமக்கொரு ஞானப்பாதுகாவலாய் அவளைத்தேடினர். சின்னஞ்சிறார் தங்கள் பிஞ்சுள்ளங்களில் அவளுக்குச் சிம்மாசனம் அமைத்து, அவளைக் கண்டுபாவிக்கக் கங்கணங்கட்டினர்.

ஆன்மாக்களில் ஈடற்றவாஞ்சையும், குருமாரில் ஓயாதகரிசனையும் கொண்டு வாழ்ந்த அர்ச். சின்னத்தெரேசாவை நாங்களும் எங்கள் கண்முன்வைத்துக் கண்டுபாவிப்போம். புண்ணியப்பாதையில் அவள்விட்டுப்போன அடிச்சுவடுகளைப்பின்பற்றி முன் செல்வோம். ஆன்மவாஞ்சைகொண்டு இன்னும் எமது மந்தையிற்சேராத மக்களையும் கொண்டுசேர்த்தருளுமாறு அவளிடம் மன்றாடுவோம். எங்கள் ஞானக்குரவர்களுக்கு எல்லா நலன்களும் அளித்துக் காக்குமாறு "சின்னமலர்" வழியாய்க் கன்னிமரிபாலகனை. இறைஞ்சுவோம். வேதபோதகர்களுடன் ஒத்துழைப்போம்.

M. V.

---

## நேர்த்தியின் பூர்த்தி

என் கணவருக்கு ஏற்பட்ட சுகவீனம் கடந்த மூன்று வருடங்களாகப் பல வைத்தியங்கள்செய்து, பெருங் கவலைக்குள்ளானபோது சத்திரசிகிச்சை இல்லாமல் பூரணசுகம் கிடைக்கச் சதாசகாய மாதாவை மன்றாடியதன்பேரில் நல்ல சுகம்கிடைத்ததற்கு அந்த நல்ல தாயாருக்கும், அவர் திருக்குமாரனாகிய யேசுவுக்கும் மனமுவந்த நன்றி செலுத்துகிறேன்.

திருமதி எஸ். ஆர். பெர்னாண்டோ,<br>
190, கோவில் வீதி,<br>
கொழும்பு. 2.

---

## மோல்தாவின் அரசியற்தலைவர்கள் பிரமாணிக்க வாக்களித்தனர்

பரிசுத்த பாப்பரசர் அண்மையில் விடுத்த "அன்னையும், ஆசிரியையும்" என்ற சமூகவியல் நிருபத்தை ஞாபகப்படுத்தும்முகமாக மோல்தாவில்நடந்த மாநாட்டில் திருச்சபையின் தண்டனை பெற்றிருப்பவரும், தொழிற்கட்சித் தலைவருமான டொம்மின்ரோவ்தவிர மற்றைய அரசியற்கட்சித்தலைவர்கள் யாவரும் கலந்துகொண்டு அந்நிருபத்தின் கொள்கைகளை அனுட்டிப்பதாக வாக்களித்திருக்கின்றனர். மோல்தாவில் திருச்சபைக்கு விரோதமாகத் தற்பொழுது நிலவிவரும் இக்கட்டான கட்டத்தில் அதிமேற்றிராணியார் கொன்சி ஆண்டகைக்குப் பிரமாணிக்கம் காட்டுவதாக உறுதியளித்தனர்.

வளம்நிறைந்தநாடுகள் பிற்போக்கான நாடுகளுக்கு உதவுவது கடமையெனப் பாப்பரசரின் நிருபம்கூறுகின்றதுஎன விளக்கி அதிமேற்றிராணியார் கூறியதாவது: "நாம் ஒருஏழைநாடு; எனவே கடந்த 160ஆண்டுகளாக நேசபான்மையுடனிருந்த நாட்டிலிருந்து உதவியை எதிர்பார்க்கிறோம்; பிரித்தானிய பாதுகாப்புஇலாகா இவ்வளவுகாலமும் இங்குசெய்துவந்த செலவைக்குறைத்து விட்டபடியால் இவ்வுதவி எமக்கு அவசியம்தேவை. பிறர்உதவி எமக்குத் தேவைஎனினும் ருஷியாபோன்ற பொதுவுடைமை நாடுகளிலிருந்து உதவியை நாம் எதிர்பார்ப்பதில்லை. ஏனெனில், எம்நாட்டில் ஆதிக்கம்செலுத்தும் மறைந்த நோக்கத்துடனேயே உதவியளிப்பர்."

இம்மாநாடு இளங்கிறிஸ்துவ தொழிலாளரால் நடாத்தப்பட்டது.

---

## தாய்மார், மனைவிமார் பற்றிப் பரிசுத்தபிதாவின் கருத்துக்கள்

"இல்லக்கிழத்தியரும் தாய்மாரும் தத்தம் இல்லங்களில் தமக்குரிய கடமைகளை மேற்கொள்ளுவதற்கு வழியாக, உழைக்கும் ஆடவருக்குப் போதிய 'படி' கொடுக்கவேண்டும். துர்அதிர்ஷ்டமாகக் குடும்ப சம்ரட்சணைக்குப் பணந்தேடி அநேக பெண்கள் வீட்டைவிட்டு வேலைக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது."

மிலான் திருஇருதய சர்வகலாசாலையில் "பெண்களும் தொழிலும்" எனும் விடயம்பற்றி நடந்த ஆய்வுகழகத்தின் உறுப்பினருக்குப் பேட்டியளிக்கையில் பரிசுத்ததந்தை இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது: பெண்கள் தொழில் புரியும் தற்காலச் சூழல் திறமையானது எனச் சொல்வதற்கில்லை. மானிடத்தன்மையின்படியும், கிறிஸ்துவ மதிப்பின்படியும் பெண்களுக்கேற்ற அமைப்பை இவ்வுலகில் ஆக்குவதற்குப் புதுவழிகளை அவசியம் நாம் கண்டறியவேண்டும்.

### சமூகவாழ்வு

ஆகவே, பெண்களைச் சமையற்கட்டிலும், தொட்டிலடியிலுந்தான் காணவேண்டுமென்பது பாப்புவின் கருத்தல்ல. சமூக, தேசாட்சி வாழ்விலும் பெண்கள் தமது கடமைகளைக் கையேற்க வேண்டும். தமது குடும்பக் கடமைகளுடன் மாத்திரம் நின்றுவிடுவது தகுதியன்று. ஆடவரைப் போன்று பெண்களும் சமூக வாழ்வில், சிறப்பாய் உணர்ச்சிப் பெருக்கும், தாய் உள்ளம் தேவைப்படும் விடயங்களிலும் உழைப்பது இன்றியமையாதது.

### சமூக கூபீட்சம்

பெண்கள் தமது இயல்பூக்கங்களைக் கற்பிப்பதிலும், சமுதாய நலச் சேவையிலும், அப்போஸ்தொலிக்க சேவையிலும் ஈடுபடுத்தித் தமது முயற்சிகளில் உளத்தாய்மையை அடையமுடியும்.

எனினும் தமது குடும்பத்தை நடாத்துவதே தமது பிரதான கடமை என்பதை அவர்கள் மனதிலிருத்த வேண்டும். பெண்ணின் முயற்சிகள் யாவற்றிற்கும் மையமாக விளங்க வேண்டியது குடும்பம்; அவளுடைய பிரசன்னம் அவசியம் தேவைப்படுவது குடும்பத்திலே எனவுங் குறிப்பிட்டார்.

---

யாழ்ப்பாண மாநகரசபை

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### இறைச்சிகடைக் குத்தகை 1962

யாழ்ப்பாண மாநகரசபையால் கட்டப்பட்டு வாடகைக்குக் கொடுக்கப்பட்ட பெரியகடையிலுள்ள 14 ஆட்டிறைச்சிக் கடைகளும், சின்னக்கடையிலுள்ள ஒரு ஆட்டிறைச்சிக் கடையும், 6 மாட்டிறைச்சிக் கடைகளும் 1-1-62 தொடக்கம் 31-12-62 வரைக்கும் குத்தகைக்குக் கொடுக்கப்படவிருக்கின்றன.

மேற்படி கடைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 10-10-61 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். இக்கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும் அரக்கு முத்திரை இடப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 10-10-61 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி வரை வழங்கப்படும். கேள்விப்பத்திரம் ஒன்றின் விலை ரூபா 2-50. அதற்கு உரிய பிணைப்பணம் ரூபா 25/-. நொத்தாரிசு உடன்படிக்கைச் செலவு ரூபா 150/-. கேள்விப்பத்திரம் பெறப்படுமன்றே மேற்குறிப்பிட்டுள்ள மூன்று தொகைகளும் (ரூபா 177/50) செலுத்தப்படவேண்டும்.

ஒருவர் ஒரு கடைக்கோ அல்லது பல கடைகளுக்கோ விண்ணப்பஞ் செய்யலாம் ஆனால், அவருக்கு ஒருகடைதான் கொடுக்கப்படும்.

இது சம்பந்தமாக இதர விபரங்கள் அறிய விரும்புவோர், கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்துமூலமோ அல்லது நேரிலோ விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

கட்சன் செல்வராஜா,<br>
பதில்ஆணையாளர்,<br>
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,<br>
யாழ்ப்பாணம்.<br>
22-9-61

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## கர்தினல் கை உடைந்தது

லியோன் நகரின் அதிமேற்றிராணியாரான மேன்மை தங்கிய கர்தினல் ஜெர்லியர் ஆண்டகை அவர்கள், நார்மண்டியில் ஆகோண் எனும் ஊரில் ஆலயத்தைவிட்டு வெளிவருகையில் வழுக்கி விழ்ந்ததின் விளைவாக இடது முன் கை உடைந்தது. கர்தினலுக்கு வயது 81.

* * *

## அர்ச். இராயப்பர் பக்தி

பரிசுத்த இராயப்பரின் பக்தியை அதிகமதிகம் பரப்பவேண்டி, திருச்சபை ஒரு புதிய பலனை அளித்துள்ளாள். வத்திக்கானின் இராயப்பர் பேராலயத்திலுள்ள பரிசுத்த இராயப்பரின் வெண்கலச் சுரூபத்தினுடைய பாதங்களைப் பக்தியுடன் முத்தி செய்பவர்கள் மூன்று ஆண்டுகள் பலனைப் பெறுவர் என அறிவித்துள்ளார் பலன்களை அளிக்கும் திருச்சங்கத்தின் தலைவர் மேன்மை தங்கிய கர்தினல் லர்ராஞே ஆண்டகை அவர்கள் இப்பலனைப்பெற, மனஸ்தாப உள்ளத்துடன் பாதமுத்தி செய்கையில் "பரிசுத்த இராயப்பரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்" என மன்ருட வேண்டும்,

* * *

## புரட்டஸ்தாந்து மாணவரின் உதவி

கனு இராச்சியத்தில் நிக்குவாத்தியாவில் தேவவாக்குச்சபைக் (S.V.D.) குருமார் நடத்தும் கலாசாலை ஒன்றுக்குத் தேவையான கட்டடம் அமைப்பதற்கு அமெரிக்கக் கலாசாலையிலுள்ள புரட்டஸ்தாந்த மாணவர்கள் உதவியளித்திருக்கின்றனர். நியூயோக்கில் பிறெஸ்பிற்றேறியன் போதகர் ஒருவர் ஏற்படுத்தின சகாயச்சபையின் உறுப்பினரான இம்மாணவர்கள் ஆபிரிக்காவுக்குச் சமூக, கலாசார ஊழியம் புரியும்படி அனுப்பப்படுகின்றனர். 43ஆபிரிக்க மாணவர்களின் உதவிபெற்று இவ் அமெரிக்க மாணவர்கள் இரு வகுப்பு அறைகளைச் சம்பேறு கல்லூரிக்குக் கட்டிக்கொடுத்தனர்.

* * *

## விரோத வர்த்தமானிகளின் ஒருமித்த கருத்து

பெருநாட்டில் லிமா பட்டணத்துச் சேரிகளில் சேவை செய்வதற்காக, திருஇரட்சகர் சபையைச் சேர்ந்த ஜெருட் புறத்தேண் சுவாமிகளைத் திரும்பவும் அழைப்பதற்குப் பரம்பரை விரோதிகள் ஒன்றுபட்டிருக்கின்றனர். முன் கூறிய நாட்டில் திருத்தொண்டாற்றிய சுவாமிகள் வேருெரு சேவைக்காகப் பிரான்சுக்குத் திரும்பிவிட்டார்.

லீமாவின் சேரிப்புறமாகிய எல்மொங்தொனில் ஆறு ஆண்டளவாக ஏழைகளுக்குச் சேவை புரிந்த சுவாமிகள் குடிசையொன்றில் வசித்து வந்தார். ஐரோப்பியரும் பெருவியருமான சிலரை இல்லறத் தொண்டராகச் சேர்த்து மக்களுக்குச் சரீர ஆன்ம தொண்டு புரியச் செய்தார். செல்வந்தரின் சுயநல வாழ்க்கையையுங் கண்டித்தார்.

பரம்பரை விரோதிகளான இரு செய்தித்தாள்கள் புறத்தேண் சுவாமிகள் திரும்பவும் வரவேண்டுமென்று விரும்பும கடிதங்களைப் பிரசுரித்தன. சுவாமிகளுடன் தொண்டாற்றிய தோழர், கர்தினல் கஷிங் ஆண்டகை தமது செல்வாக்கைப் பிரயோகித்துச் சுவாமிகளை அழைப்பிக்க வேண்டுமென்று கேட்டனுப்பிய தந்தியையும் பிரசுரித்தன. பெரு அரசாங்கமே சுவாமிகளை வெளியேற்றியது எனக் கருதப்படுவதாகவும் கூறின.

## திரிகாலமணி அடித்தநேரம் எழுந்து நடந்தார்

சென்ற மாதம் சல்போட் மேற்றிராசனத்திலிருந்து சென்ற லூர்துபதி யாத்திரிகர்களில் ஒருவரும், கடந்த இரண்டரை ஆண்டுகளாக முதுகெலும்பில் ஏற்பட்ட கோளாறின் நிமித்தம் கால் வழங்கமுடியாமல்இருந்தவருமான ரொம் உவால்ஸ்உடைய சுகநிலை லூர்துபதி வைத்திய ஆராய்ச்சியாளரால் ஆராய்ச்சிக்கெடுக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

45 வயதினரான திரு. உவால்ஸ் அரசாங்கத்திடம் சகாயப்பணம்பெற்று வந்தார். லூர்துபதியில் இருந்து பூரண சுகதேகியாய்த் திரும்பினர். மாண்செஸ்றர் வைத்தியசாலை அதிகாரிகள் அவருக்கு இனிமேல் எவ்வித சிகிச்சையுமே தேவையில்லையென உறுதிப்படுத்தினர். திரு. உவால்ஸ் கூறியதாவது: 'ஞாயிற்றுக்கிழமை பூசைவேளையில், என்னுடைய தள்ளுவண்டியில் இருந்து தூக்கிவிடப்படுவதுபோல் உணர்ந்தேன். திரிகால மணியடிக்கும் வேளை மாதாவின் குகையடிக்கு எப்படியும் போகவேண்டுமென விளங்கிக் கொண்டேன். திரிகால மணியடித்த வேளை என்னுல் நடக்க முடியும்; நோவெல்லாம் பறந்து விட்டது என்று அறிந்தேன். என்னைக் கண்காணித்துக் கொண்டிருந்தவர் சில்லுக் கதிரையில் இருந்து எழும்பவிடாமற் தடுக்கப்பார்த்தார்; ஆனுல், நடக்கவேண்டுமென்று நான் பிடிவாதம்கொண்டு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குப்பின் நடக்கத் தொடங்கினேன்".

திரு. உவால்ஸ் லூர்துபதிக்குச் செல்லுமுன்னும் பின்னும் அவரை அறிந்தவண. வில்லியம் மறேய்,சே. ச. சுவாமிகள், "அவருடைய நிலைமையிலேற்பட்டிருக்கும் மாற்றம் குறிப்பிடத்தக்கது; லூர்துபதி வைத்திய ஆராய்ச்சியாளர் ஆராய வேண்டியதொன்று என எண்ணுகிறேன்·" எனக் கூறினர்.

* * *

## ஓரே நாளில் ஆறு தேவதிரவிய அநுமானங்கள்

65 வயதுடைய பிரான்சிஸ்கோ டயஸ் கடினவியாதியுற்று மரண அவஸ்தையாயிருந்தார். பிலிப்பைன் தீவில் ஒரு தனி இடத்தில் வாழ்ந்த அவருக்குத் திருச்சபையின் தாய்க்குரிய அன்பை அளிக்க இயலாது போயிற்று. அவரது மரண நிலையைக் கேள்வியுற்ற சங். டக்ளஸ் வென் சுவாமிகள் டயஸின் குடிசைக்கு விரைந்தார். அவருக்கு ஞானஸ்நான மளித்து, பாவசங்கீர்த்தனம் கொடுத்து, நாற்பது ஆண்டுகள் அவருடன் வாழ்ந்து வந்த பெண்ணேடு திருமணம் முடித்து, அவஸ்தைப் பூசுதல் அளித்து, புது நன்மையும் கொடுத்தார். அடுத்தபடியாக சங். ஹெர்பார்ட் ஹெலியட் சுவாமிகள் வந்து டயஸுக்கு உறுதிப் பூசுதல் கொடுத்தார்.

* * *

## கருதினல்சிக்கோக்னியானி

தமது இராச்சிய செயலாளராக ஏன் மேன்மை தங்கிய சிக்கோக்னியானி ஆண்டகையைத் தெரிந்து கொண்டார்? என்ற கேள்விக்குப் பரிசுத்த தந்தை பதில் இறுக்கின்ருர்: "கிழக்கிலும், மேற்கிலும், பழைய உலகிலும, புது உலகிலும திருச்சபையின் பல்வேறு பணிகளிலும் ஆழ்ந்த அநுபவம் பெற்றவர் கர்தினல் சிக்கோக்னியானி என்று நானறிவேன்" என்று பரிசுத்த தந்தை தான் எழுதிய பதவி அளிப்புக் கடித[illegible]யுள்ளார்.

## சீதனத் தடைச்சட்டம் திருச்சபைக்கு நஷ்டம்

சீதனம் கொடுப்பதைத் தடைசெய்து இந்தியா ஏற்படுத்தியிருக்கும் சட்டத்தினுல் திருச்சபைக்கு ஏற்படுகின்ற நஷ்டம்பற்றிக் கேரளநாட்டின் 16 மேற்றிராணிமார் ஏர்ணகுளத்தில் கூடிய மகாநாட்டில் ஆலோசித்தனர். கேரளநாட்டில் பலநூற்ருண்டுகளாகத் திருமணம் செய்யும் பெண்கள் தமது சீதனத்தின் ஒரு பகுதியைத் திருச்சபைக்கு நன்கொடையாக அளித்து வருவது வழக்கம்.

மேற்றிராணிமார் ஆலோசனைக்கு எடுத்துக்கொண்ட இன்னுமொரு விடயம் யாதெனில், பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கும் உபகரணங்களுக்கு மானியம் வழங்க அரசாங்கம் மறுப்பதாகும். அரசாங்கம் செலவு கொடுப்பதாகக்கூறியதை ஆதாரமாகக் கொண்டு உபகரணங்களுக்குச் செலவு செய்தபடியால் அரசாங்கத்துக்கு மாருக இதுவிடயம்பற்றி வழக்குத் தொடர ஆலோசிக்கிருர்கள்.

கிறிஸ்துவ திருமணங்கள்பற்றி அரசாங்கம் செய்துள்ள சட்டம் அமுலுக்கு வருமாயின் கத்தோலிக்க குருமார் முன்னிலையில் விவாகங்கள் நடந்தேறுவதற்குத் தடையாயிருக்கும் என்பதுபற்றியும் மேற்றிராணிமார் ஆலோசித்தனர்

* * *

## கத்தோலிக்க நிருபத்தைப் படிக்கும்படி பணிக்கிருர் அங்கிளிக்கன் மேற்றிராணியார்

தெற்கு ருெடேஷிய மசோனலாந்து அங்கிளிக்கன்சபை அத்தியட்சகர் ஒல்ட்டர்சன் "இந்நாட்டின் கத்தோலிக்க மேற்றிராணிமார் இவ்வாண்டு ஆரம்பத்தில் சாதிகள் இடை நீதிநிலவுவதுபற்றி விடுத்த நிருபத்தை வாசித்துக் குறிப்பு எடுத்துக் கொள்ளுமாறு" தமது சபையின் போதகர்களைக் கேட்டிருக்கிருர். இந்நிருபத்தால் கிறிஸ்துவ மக்களாகிய நாம் மாத்திரமல்ல, இந்நாட்டின் சகல பிரசைகளுமே அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாகின்றனர்.

ஆரம்பத்திலிருந்தே இந்நிருபத்துக்கு விரோதமான மனப்பதிவு ஏற்பட்டது எனப் பத்திரிகைகளில் பிரசுரமான கடிதங்களிலிருந்து அறியக்கூடியதாயிருந்தது. 31 பக்கங்கள்கொண்ட இந்நிருபத்திலிருந்து சில பகுதிகளை எடுத்துப் பிரமானதப்படுத்தியதே இதற்குக் காரணமாகும். உதாரணமாக "நாஷி" என்ற சொல் ஒருமுறை மாத்திரம் உபயோகித்திருந்தாலும்,ருெடேஷியா ஹிற்லருடைய ஜேர்மனியைப் போன்றது என்று மேற்றிராணிமார் கூறுவதாகத் திரித்துக்கட்டிவிட்டன பத்திரிகைகள்.

தென்னுபிரிக்காவிலுள்ள சுதந்திர நாடுகளின் சட்டக்கோவைகள் நாம் எதிர்பாராதமுறையில் சர்வாதிகாரநாடுகளின் சட்டங்கள்போல் ஆகிவிட்டன என்பது உண்மை. எனினும், இந்நாட்டில் இனமேன்மைபற்றிக் கூறப்படும் கொள்கைகளும், அனுட்டிக்கப்படும் முறைகளும் நாஷிக் கொள்கைகளைவிட வித்தியாசமானது அல்ல என்பதை மாத்திரமே மேற்றிராணிமார் கூறினர். அதனுலே ருெடேஷியா நாஷிக் கொள்கைகளைக் கொண்ட ஜேர்மனிபோல் ஆகிவிடவில்லை என்ருர்.

## கத்தோலிக்க பாட்சாலைகளைப் பாராட்டுகிருர் அவுஸ்திரேலிய பிரதமர்

மதஸ்தாபன பாடசாலைகள் செய்து வரும் தொண்டுக்கும், அவை தொடர்ந்து பணிபுரிந்துவருவதற்கும் தமது நன்றியைச் சமர்ப்பித்தார் அவுஸ்திரேலிய பிரதமர் திரு. ஆர். ஜி. மென்சிஸ் அவர்கள்.

சிட்னிநகரில் உள்ளதும், அவுஸ்திரேலியாவிலேயே மிகவும் பெரிய விடுதிச்சாலையைக் கொண்டதுமான அர்ச். சூசையப்பர் கல்லூரியின் விஞ்ஞான கூடத்தைத் திறந்து வைக்கும்போதே கீழ்க்கண்டவாறு கூறினர் அவுஸ்திரேலிய பிரதமர். இக்கல்லூரி சிட்னிநகரில் உள்ள மாறிஸ்ற் சந்நியாசசபையினரால் நடாத்தப்பட்டு வருகின்றது.

பிரதமர் தமது உரையில் மேலுங் கூறியதாவது: தற்காலப் பிரச்சினைகளை எவ்வளவு கரிசனையோடு நோக்குகிறேனே, அவையாவும் நடக்கை சம்பந்தமான பிரச்சினைகள் என்றே கருதுகிறேன். இதுபோன்ற கல்லூரிகள் நல்ல பண்புகளையும், நல்ல ஒழுக்கத்தையும் பயிற்றுவதில் பெரும்பங்குடையனவாய்த் திகழ்கின்றன. இன்றைய வேதகலாபனைகள், நாகரீகம் மனிதரது ஆன்மாவிலும் இருதயத்திலும் இருக்கின்றதென்ற கல்விப்படிப்பினையை அறியாதவர்களாலேயே நடாத்தப்படுகின்றன. விஞ்ஞான அதிசயங்களும், நவீனபோக்குவரத்துச்சாதனங்களின் வேகமும், எமது யுகத்தை நாகரீகத்தின் பொற்காலம் என்று எண்ணும்படி செய்துவிட்டனவெனினும், இந்நூற்ருண்டு முந்திய எந்தக்காலத்தையும்விட அநேக யுத்தங்களையும்,அநீதிகளையும் விளைவித்திருக்கின்றது என்ருர் அவர். சகோதர மனப்பான்மையும், உபகாரசிந்தையும் ,பரஸ்பரசிநேக மனப்பான்மையும் கடவுளின் தந்தைத்தன்மையின் உணர்வுமே நாகரிகத்தின் முக்கிய அம்சங்களாகும் என்றும் குறிப்பிட்டார் பிரதமர் மென்சிஸ்.

* * *

## ஒழுக்கசீருக்குத் தற்கொலை அளவுகோல்

**ஸ்பானிய உள்நாட்டுக்கலகம் ஆரம்பித்து 25 ஆண்டுகளின் பின், பொதுவுடைமையர் நாட்டைக்கைப்பற்றுவதைத் தடுத்ததின்பின், 30இலட்சம் மக்களுக்குத் திருச்சபைசெய்த சேவை யாது?**

**ஒரு நாட்டின் ஒழுக்கத்தை அளவிட அங்கு தற்கொலை செய்பவர்களின் தொகை உதவும். ஸ்பானியநாட்டில் இத்தொகை குறைவு. 1951—1955 இடையில் தற்கொலை செய்தவர்களின் தொகை 100,000 மக்களுக்கு 5·8 ஆகும். இதை இங்கிலாந்து (10 6), அமெரிக்கா (10·2), ஜேர்மனி (18·6) முதலியநாடுகளுடன் ஒப்புநோக்கின் ஸ்பெயினின் ஒழுக்கசீர் நன்குவிளங்கும். வேறுதுறைகளிலும் திருச்சபையின் சேவையைக் காணலாம்.**

**அண்மையில் திரட்டிய புள்ளி விபரத்தின்படி 10இலட்சம் ஸ்பானியருள் 7பேர் மாத்திரம் விவாகஇரத்துச்செய்தவர்களாகும். 1959இல் எட்டு மேற்றிராசனங்களில் விவாகநீக்கவழக்குத் தொடரப்படவில்லை.**

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday Septemder 30 1961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org